RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 05ஏப்ரல் 2024 இதழ்:- 45

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# இந்தியாவில் 32வருட சிறை வாழ்வை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பிய முருகன், பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் நீண்ட நேர விசாரணையின் பின் விடுதலை!





இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில், 32 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்து, விடுதலை செய்யப்பட்ட முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக் குமார் ஆகியோர் 03 ஏப்ரல் 2024 நண்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை சென்றடைந்த நிலையில், விமான நிலை யத்தில் நீண்ட நேரம் தடுத்து(3ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife

ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க
eelanadu.ca

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கும் முன்மொழியை ஆதரிக்கவில்லை!

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கும் முன்மொழிவை நான் ஆதரிக்கவில்லை. அந்த முன் மொழிவுக்கு தமிழ் மக்களிடத்தில் பரவலான கருத்தாதரவு கிடையாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்து ள்ளார். (5ம் பக்கம் பார்க்க)



## பாராளுமன்றக் கலைப்பு விவகாரம்:- பஸிலின் முயற்சியை முற்றாக முறியடித்த ரணில்!

113 எம்.பி.க்களின் ஆதரவைத் திரட்ட முடியாத நிலை யில் தீர்மானம் நிறைவேற்றி பாராளுமன்றத்தை கலைக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளதாக பெயர் வெளியிட விரும்பாத பாராளுமன்ற(3ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா தாக்கல் செய்த முறைப்பாடு:- மைத்திரி தலைவராகச் செயற்பட தடை!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



21 Years Real Estate Experience


HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Lawrence /Morningside**




**Scarborough** $447,000
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony Amazing View

**Fanshawepark / Highbury Ave**



**London** $720,000
Bedrooms: 3+2 Washrooms: 2
bungalow with an inground pool

**Kennedy Rd & Bovaild Dr. E**




**Brampton** $1,100,000
Bedrooms: 4+1 Washrooms: 3
Recently renovated

**Dixie Rd & Bovaird Dr E**





**Brampton** $1,349,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Fully finished legal basement

**Pine Ridge Dr & Farley Dr**



**Guelph** $1,199,900
Bedrooms: 3+1 Washrooms: 4
finished basement

**Meadowvale / 401**




**Scarborough** $1,898,000
Bedrooms: 4+3 Washrooms: 5
fully fin.basement with sep entrance

**Tenth Line & 19th Line**




**Stouffville** $1,699,000
Bedrooms: 4+3 Washrooms:7
Newly Built under a year old home

**Leslie St & Green Ln**



**East Gwillimbury** $1,899,900
Bedrooms: 4 Washrooms: 4
Minutes to Transit & Go, Hwy 404

**Bur Oaks / Markham Rd.**




**Markham** $539,900
Bedrooms: 1 Washrooms: 1
Newer Modern Condo Building

**Annland & Liverpool**




**Pickering** $849,900
Bedrooms: 3 Washrooms: 2
This newly renovated home

**Steels Ave/Mississauga Rd**





**Brampton** $2,250
Bedrooms: 3 Washrooms: 2
Brand new legal basement

**Church & Rossland**




**Ajax** $1,600
Bedrooms: 1 Washrooms: 1
Open Concept Living & Kitchen

**Grandview St / Conlin Rd**




**Oshawa** $3,500
Bedrooms: 4 Washrooms: 3
Freshly Renovated Home In Taunton

**Mccowan And Ellesmere**




**Scarborough** $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Close to Transit, STC, Library

*Looking for more house?*

**www.AgentSiva.com**

WILL BRING THE BEST RESULTS!

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இந்தியாவில் 32வருட சிறை வாழ்வை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பிய முருகன், பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் நீண்ட நேர விசாரணையின் பின் விடுதலை!

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தி கொலை வழக்கில், 32 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்து, விடுதலை செய்யப்பட்ட முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் 03 ஏப்ரல் 2024 நண்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை சென்றடைந்த நிலையில், விமான நிலையத்தில் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டனர்.

நீண்ட விசாரணைகளின் பின்னர் அவர்கள், விமான நிலையத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முருகன்,ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரை அழைத்து வருவதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், அக் கட்சியின் சட்ட ஆலோசகர் க.சுகாஸ், தவத்திரு




வேலன் சுவாமி ஆகியோர் கட்டு நாயக்க விமான நிலையத்திற்குச் சென்றிருந்தனர். முருகன்,ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோருடன் இந்தியாவிலிருந்து சட்டத்தரணி புகழேந்தியும் வருகை தந்திருந்தார்.

# சந்திரிகா தாக்கல் செய்த முறைப்பாடு:- மைத்திரி தலைவராகச் செயற்பட தடை!



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் 04 ஏப்ரல் 2024 தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமார துங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு அமைய கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சந்துன் விதான இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். இந்த நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து புதிய பயணத்தை மேற் கொள்ள அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாக துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவன்ன மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் விசேட செய்தியாளர் மாநாட்டை நடத்திய போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இந்த விசேட செய்தியாளர் மாநாடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அவர்கள் மேலும் கூறியதாவது, கட்சியின் அழிவினை பார்த்துக் கொண்டிருக்க முடியாத நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க நீதிமன்றத்தை நாடினார். அதற்கிணங்க, கட்சியின் தலைவராக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு தடை விதிக்கப் பட்டது என்று குறிப்பிட்டுள்ளனர்.

# பாராளுமன்றக் கலைப்பு விவகாரம்:- பஸிலின் முயற்சியை முற்றாக முறியடித்த ரணில்!

113 எம்.பி. க்களின் ஆதரவைத் திரட்ட முடியாத நிலையில், தீர்மானம் நிறைவேற்றி பாராளுமன்றத்தை கலைக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளதாக பெயர் வெளியிட விரும்பாத பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பசில் ராஜபக்ச, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போது இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் அரசியலமைப்பு ரீதியாக திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை அறிவிக்குமாறு கோரினார்.

எனினும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலுக்கு செல்வதற்கு ஜனாதிபதி இணங்கவில்லை. இந்த பின்னணியில், ராஜபக்ச



வுக்கு விசுவாசமான சில எம்.பி.க்கள், பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அவையை கலைத்து, முன் கூட்டியே பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். எவ்வாறாயினும், பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் முன் கூட்டியே பொதுத் தேர்தலுக்கு தயாராக இல்லாத காரணத்தினால் இந்த முயற்சி தோல்வி அடைந்துள்ளது. பொதுத் தேர்தல் 2025 இல் நடத்தப்படவே திட்டமிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தை எந்த நேரத்திலும் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அப்படியிருந்தும், பெரும்பான்மையான எம்.பி.க்கள் அத்தகைய தேர்தலை விரும்புகிறார்கள் என்பதை நிரூபிக்க பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை அவர் கோரியிருந்தார். ஆனால் ரணிலின் சூழ்ச்சிகரமான அரசியல் நகர்வுகளால் இத்திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# இது எப்படி இருக்கு? காஸா சிறுவர்களுக்கு 1 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கிய ரணில்




காஸா பகுதியில் இடம்பெறும் மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக இலங்கை அரசாங்கத்தின் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையை ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ முகவர் நிறுவனத்தின் ஊடாக பாலஸ்தீன அரசாங்கத்திடம் கையளிக்கும் நிகழ்வு 01 ஏப்ரல் 2024 ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதற்கான காசோலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹேர் ஹம்தல்லாஹ் ஸைதிடம் (Dr. Zuhair Hamdallah Zaid) உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற காசோலை கையளிக்கும் நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் இலங்கைக்கான பலஸ்தீன தூதரக சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யோசனையின் பேரில் காஸா பகுதியில் இடம் பெற்ற மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு பெருமளவிலான நன்கொடையாளர்கள் ஏற்கனவே நிதியுதவி அளித்திருந்தனர்.

அத்துடன் இவ்வருடம் இப்தார் நிகழ்வுகளை நடாத்துவதற்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களால் ஒதுக்கப்பட்ட நிதியை இந்த நிதியத்துக்கு வழங்குமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, முதற்கட்டமாக காஸா சிறுவர் நிதியத்திற்காக வழங்கப்பட்ட ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் பலஸ்தீன அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

அத்துடன் காஸா சிறுவர் நிதியத்திற்கு (Children of Gaza Fund) பங்களிக்குமாறு நன்கொடையாளர்களிடம் ஜனாதிபதி அலுவலகம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி கிடைத்துள்ளதுடன், அந்த நிதி எதிர்வரும் நாட்களில் பலஸ்தீன அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளது.

நன்கொடையாளர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மாத்திரமே இந்த நிதியத்திற்கு பங்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்குப் பங்களிக்க விரும்புவோர் தமது நன்கொடைகளை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையின் 7040016 எனும் கணக்கு இலக்கத்தில் வைப்பிலிட முடியும்.

அதற்கான பற்றுச் சீட்டை 077-9730396 எனும் எண்ணுக்கு வட்ஸ்அப் ஊடாக அனுப்புமாறு ஜனாதிபதி அலுவலகம் கோரியுள்ளது.

## சூரியோதயம் காண்பதற்காக சிகிரியாவுக்கு நடந்து சென்ற கனடிய பெண்ணைத் தாக்கிய காட்டு யானை

சூரிய உதயத்தைக் காண்பதற்காக சீகிரியாவுக்கு நடந்து சென்ற கனேடிய சுற்றுலாப் பயணிகளில் ஒருவரை 02 ஏப்ரல் 2024 அதிகாலை காட்டு யானை தாக்கியுள்ளது. இந்த தாக்குதலில் பெண் படுகாயமடைந்துள்ளதுடன், அவர் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சீகிரிய சுற்றுலா பயணச்சீட்டு அலுவலகத்துக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான பெண்ணின் கணவரின் அலறல் சத்தம் கேட்ட சுற்றுலா வழிகாட்டி ஒருவர் உடனடியாக தனது மோட்டார் சைக்கிளில் அந்த இடத்துக்கு சென்று பார்த்த போது குறித்த பெண் காட்டு யானையால் தாக்கப்பட்ட நிலையில் அங்கு காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சுற்றுலா வழிகாட்டி தனது மோட்டார் சைக்கிளின் ஒலியை எழுப்பி பிரதான மின்



விளக்கை பயன்படுத்தி காட்டு யானையை விரட்டியுள்ளார்.




கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே! வணக்கம்!

அம்பாள் கோவில் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இந்த வருடம் வருடாந்த மஹோற்சவமும் திருவிழாவும் நடைபெறாது என்பதை பணிவுடன் அறியத் தருகின்றோம்.

வெகு விரைவில் எண்ணெய்க் காப்பும் மகா கும்பாபிஷேகமும் இடம் பெறவுள்ளது. அது சம்பந்தமான மேலதிக நேர கால விபரங்கள் மிகவிரைவில் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

13 ஏப்ரல் 2024 சனிக்கிழமை:- தமிழ் சித்திரைப் புத்தாண்டு

விசேட பூஜை காலை 10.30 மணிக்கு நடைபெறும். வியாழன், வெள்ளிக்கிழமைகளில் மருத்து நீர் வழங்கப்படும். பக்தர்கள் ஆலயத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளலாம். - ஆலய நிர்வாகம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கும் முன்மொழியை ஆதரிக்கவில்லை!

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை கள மிறக்கும் முன்மொழிவை நான் ஆதரிக்கவில்லை. அந்த முன் மொழிவுக்கு தமிழ் மக்களிடத்தில் பரவலான கருத்தாதரவு கிடை யாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி தேர்தலில் யார்யார் போட்டியிடப் போகின்றார்கள் என்பது சம்பந்த மாக உத்தியோகபூர்வமான அறி விப்புக்கள் வெளியாகவில்லை. அந்த அறிவிப்புக்கள் உறுதியாக வெளியானதன் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொதுவேட்பா ளர் ஒருவர் களமிறக்கப்படுவது தொடர்பிலான உரையாடல்கள் ஆரம்பமாகியுள்ள நிலையிலும் ஜனாதிபதி தேர்தலுக்கான முன்னா யத்தங்களை தேசிய கட்சிகள் முன்னெடுத்து வருகின்றமை நிலையிலும் கருத்து வெளியிடும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொதுவேட் பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற முன்மொழிவுக்கு தமிழ் மக்களிடத்தில் பரலவலான ஆதரவு கிடையாது.



அத்துடன் குறித்த முயற்சியானது தமிழ் மக்களுக்கான சதகமான நிலைமைகளை உருவாக்கும் என்றும் நான் கருதவில்லை. தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் வாழுவதற்காக ஆணையை வழ ங்கி வந்துள்ளார்கள். அவ்விதமான நிலையில் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை தமிழர்கள் சார்பில் களமிறக்கும் விடயத்தினை நான் ஆதரிக்க வில்லை.

அதே நேரம் தென்னிலங்கை அரசி யல் கட்சிகள் எதிர்வரும் ஜனாதி பதி தேர்தலுக்கான வேட்பாளர் களை இன்னமும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. அவர்கள் அவ்வாறு அறிவிக்கின்ற போது நாம் இறுதியான தீர்மானத் தினை எடுப்போம்.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஐக்கிய இலங்கைக்குள் அதியுச்ச அதிகார ங்கள் பகிரப்பட வேண்டும் என்று கோரிவருகின்றார்கள்.

அத்துடன் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் அவர்களின் வரலாற்று ரீதியான வாழிடங்களான வடக்கும் கிழக்கும் இணைக்கப் பட வேண்டும் என்றும் வலியுறு த்தி வருகின்றார்கள். அந்த வகை யில் ஜனாதிபதி தேர்தலில் களமிற ங்கும் வேட்பாளர்கள் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான கோரிக்கை களை ஆதரிப்பவர்கள் பற்றியே நாம் கருத்தில் கொள்ள முடியும் என்றார்.

# தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னரே பொது வேட்பாளர் குறித்து தமிழரசுக் கட்சி ஆராயுமாம்

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாள ராக ஒருவரை நிறுத்துவது தொடர்பாக தமிழரசுக் கட்சி இன் னமும் கலந்துரையாட வில்லை என. நாடாளுமன்ற உறுப்பினர் எனவும் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் துள்ளார்.



யாழ்ப்பாணத்தில் 29 மார்ச் 2024 நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பின் போதே எம்.ஏ.சுமந்திரன் இவ் வாறு தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்துவதற்கு பேசப்பட்டு வரு வது தொடர்பில் கேள்வி எழுப்பிய போது.

தமிழரசுக்கட்சி இதைப்பற்றி இன் னமும் கலந்துரையாடவில்லை எனவும் தேர்தல் அறிவிக்கப்படுகிற போது இது சம்மந்தமாக கலந் துரையாடி முடிவெடுப்போம் என பதிலளித்துள்ளார். மேலும் பொது வேட்பாளரோ தனி வேட்பாளரோ அது எவருக்கும் இருக்கிற உரிமை. யாரும் தேர்தலில் போட் டியிடலாம். எவரையும் போட்டி யிடக் கூடாது என்று சொல்லுகிற உரிமை எவருக்கும் கிடையாது.

இந்த பொது வேட்பாளர் தொடர பில் எமது தமிழரசுக் கட்சி எந்த வொரு நிலைப்பாட்டையும் எடு க்கவில்லை. முதலில் தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும். யார் யார் வேட்பாளர்கள் என தெரிய வேண்டும். அதைத் தொடர்ந்து நாங்கள் கலந்துரையாடி முடி வெடுப்போம்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் ரணில் விக்ரமசிங்க விற்கு ஆதரவை வழங்குவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ள விடயம் குறித்து கேட்ட போது,

அவர் மட்டுமல்ல ஒவ்வொரு கட்சியினரும் எல்லா மக்களின் வாக்கும் தங்களுக்கு தான் என்று சொல்லுவார்கள். ஆகையினால் அதையெல்லாம் பெரிசாக எடுத் துக் கொள்ள வேண்டிய தேவை யில்லை. யாருக்கு வாக்களிப்பது என மக்கள் தீர்மானிப்பார்கள் என் றார்.

அனுரகுமார திஸாநாயக்க தலை மையிலான தேசிய மக்கள் சக்தி யினர் இங்குள்ள தமிழ்க் கட்சி களை சந்தித்து ஆதரவை கோர உள்ளதாக அறிவித்துள்ளமை தொடர்பில் கேட்ட போது, அடு த்த வாரம் அவர்கள் சந்திக்க உள்ளதாக கூறினார்.

மேலும் அவர்களோடு மட்டுமல்ல ஏனைய பல கட்சிகளுடனும் நிறைய சந்திப்புக்கள் தொடர்ச்சி யாக நடை பெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. ஆனால் தேர்தல் என்று வருகிற பொழுது அதில் யார் யார் வேட்பாளர்கள் என அறிவிக்கப்படுகிற பொழுது நாங்கள் உறுதியான சந்திப்புக் களை மேற் கொண்டு முடிவை தீர்மானிப்போம். இவ்வாறான நிலைமையில் தான் தேசிய மக்கள் சக்தியினர் எம்மை சந்திக்க போவ தாக சொல்லியுள்ளனர். எனவே எம்மை சந்திக்க வருகிற எல்லோ ரையும் நாங்கள் சந்திப்போம் என்றார்.

இதேவேளை தமிழரசுக் கட்சியில் இருந்து விலகிச் செல்லும் திட்டம் எதுவும் என்னிடம் இல்லை. இப்போது உள்ளவாறு கொண்ட கொள்கையில் இருந்து விலகாதவாறு தமிழரசுக் கட்சி பய ணிக்குமாக இருந்தால் அந்தக் கட்சியிலேயே தொடர்ந்தும் பயணிப்பேன். இவ்வாறு தெரிவித் தார் தமிழரசுக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந் திரன். டான் தொலைக்காட்சி ஸ்பொட்லைட்' நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடுகை யிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழரசுக் கட்சியின் தலைவராக மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவு செய்யப்பட் டால் கட்சியில் இருந்து விலகிச் செல்லும் திட்டம் ஏதும் உண்டா என சுமந்திரன் எம்.பியிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர் அப்படி எந்த திட்டமும் என்னிடம் இல்லை. தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியுடனேயே பயணிப்பேன். கடந்த 15வருடங்களாக கட்சியின் தலைமைப் பொறுப்பில் இல்லாமல் கட்சிப் பணிகளில் அதிகளவு ஈடு பாட்டுடன் செயல்பட்டுள்ளேன். ஆகையால் தொடர்ந்தும் அவ் வாறே பயணிப்பேன் எனவும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

# இரா.சம்பந்தனா?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஆலோசனையை தான் ஆதரிக்கவில்லை என்றும் அந்த நிலைப்பாட்டுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவில்லை எனவும் சம்பந்தன் தெரிவித்தாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு ஆதரவு இருக்கின்றதா அல்லது இல்லையா என்பது ஒரு பொது வேட்பாளரை நிறுத்திய பின்னர் தான் அறிய முடியும். எனவே, அது தொடர்பான முன்கூட்டிய கணிப்புகள் அர்த்தமற்றவை. இது தவிர தமிழ் மக்கள் எவ்வா றான மனநிலையில் இருக்கின்றார்கள் என்பதை சம்பந்தனால் எவ்வாறு அறிய முடிந்தது? ஏனெ னில், சம்பந்தன் அவரின் சொந்தத் தொகுதியான திருகோணமலைக்கு கடந்த மூன்று வருடங் களாக செல்லவில்லை.

இது தொடர்பில் திருகோணமலை தமிழ் மக்கள் என்ன கருதுகின்றார்கள் என்பதையே சம்பந்தனால் அறிய முடியவில்லை.

சம்பந்தன் இவ்வாறு கூறினாரென செய்தியொன்று வெளியானதைத் தொடர்ந்து சம்பந்தனால் இவ் வாறு கூறியிருக்க முடியுமா அந்தளவுக்கு அவர் தெளிவாக இருக்கின்றாரா என்னும் கேள்வியே எழுந்திருக்கின்றது. ஏனெனில், அந்தளவுக்கு சம்பந்தன் அரசியல் விடயங்களிலிருந்து துண்டி க்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றார். சம்பந்தன் தெளிவாக சிந்திக்கக்கூடிய நிலையில் இருந்திருந் தால் இலங்கை தமிழ் அரசு கட்சியை நீதிமன்றம் செல்ல விட்டிருக்கமாட்டார்.

சம்பந்தன் தெளிவான நிலையில் இருந்திருந்தால் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு க்கான போட்டியும் நடைபெற்றிருக்காது. தற்போ துள்ள நிலையில் சம்பந்தன் அரசியல் தீர்மானமற்ற ஒரு மனிதராகவே இருக்கின்றார்.

அவரின் கருத்துகளை செவிமடுக்கும் நிலையில் அவரின் கட்சியும் இல்லை மக்களும் இல்லை. இதனை கருத்தில் கொண்டு தான், சம்பந்தனின் கருத்துகளை நோக்க வேண்டும். இந்தப் பின்புலத் தில் நோக்கினால், ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான உரையாடல்களை, மக்கள் மனு — வடக்கு, கிழக்கு சிவில் சமூகக் குழுவே முன்னெ டுத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் அரசு கட்சியின் ஏகோபித்த ஆதரவை பெற்று வெற்றி பெற்றிருந்த (அது தற்போது நெருக்கடி யில் இருக்கலாம்) சிவஞானம் சிறிதரன் உட்பட ஏனைய கட்சிகளின் தலைவர்களும் கொள்கையள வில் இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனால், இந்த விடயத்தை முன்கொண்டு செல்வதற்கான செயல் பாடுகள் எவையும் இதுவரையில் முன்னெடுக்கப் படவில்லை. மக்கள் மனு சிவில் சமூகம் விடய த்தை பேசு பொருளாக்கும் கருமங்களையே முன் னெடுத்து வருகின்றது. அனைத்து கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்தித்தால் மட்டுமே, இந்த விடயம் சாத்தியப்படும் இல்லா விட்டால் தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கரு ஒரு தோல்வியடைந்த நிலைப்பாடாகவே இருக்கும்.

ஆனால் தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் என்பது இயலாத காரியமல்ல முயற்சித்தால் சாத்தி யப்படுத்தக்கூடிய விடயம் தான். இவ்வாறான தொரு முயற்சி தென்னிலங்கையில் இனவாத சக்திகளை கிளர்ந்தெழச் செய்யும் என்று கூறும் வாதங்கள் அர்த்தமற்றவை ஏனெனில், இவ்வாறான முயற்சிகள் இல்லாவிட்டாலும்கூட, தென்னிலங்கை யின் கடும்போக்கு தரப்புகள் அமைதியடைந்து விடப்போவதில்லை. என்பது பொருளல்ல.

அவர்கள் தேவைப்படும்போது, வெளியில் தமிழர் விரோத நிலைப்பாட்டோடு முகம் காட்டுவதை எவராலும் தடுக்க முடியாது.

அது இலங்கைத் தீவின் ஓர் அரசியல் போக்கு. சம்பந்தன் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களு க்கு தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடானது ஒரு வேளை, அவர்களின் தனிப்பட்ட ஈடுபாடுகளு க்கு முரணாக இருக்கலாம். அதனால் அவர்களில் சிலர் இதனை வெளிப்படையாக ஆதரிக்கத் தயங்கலாம். அதற்காகத் தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கரு தவறானதல்ல. அது பரிசோதிக்கக் கூடியது தான்.

# றொறன்ரோவில் நடைபெற்ற கனடிய தமிழர் பேரவையின் மகளிர் தினக் கொண்டாட்டங்களும் விருது வழங்கலும்



கனடிய தமிழர் பேரவையின் மகளிர் தின கொண்டாட்டங்கள் மார்ச் 24, 2024 அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வானது கனடாவில் உள்ள தமிழ் சமூகத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் பெண்களின் குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் பங்களிப்புகளைக் கொண்டாடும் வகையில் அமைந்திருந்தது. பாரம்பரிய மங்கள விளக்கு ஏற்றுதல் கலாச்சார முக்கியத்துவத்துடன் ஆரம்பமான நிகழ்வு கனேடிய தேசிய கீதம் மற்றும் தமிழ் தாய் வாழ்த்து பாடுவதன் மூலம் நமது இரட்டை பாரம்பரியத்தையும் கலாச்சாரங்களின் இணக்கமான கலவையையும் பிரதிபலித்து தொடர்ந்தது அதிகாரமளித்தல் மற்றும் கொண்டாட்டத்தின் கருப்பொருளை எதிரொலிக்கும் வகையில், தமிழ் சமூகத்தில் உள்ள பல தரப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் கலாச்சார நடன நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

CTC இன் தலைவர் ரவீனா ராஜசிங்கம், தனது உரையில் பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்கும் பல்வேறு துறைகளில் பெண்களின் தலைமையை ஆதரிப்பதற்கும் அமைப்பின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார். வசந்தி அழகுசாதனப் பொருட்களின் நிறுவனர் பிங்கி கோசல் மற்றும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கான மருத்துவமனையின் மருத்துவப் பயன்பாடுகளின் இயக்குநர் நிண்டு குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டதோடு அவர்களின் வெற்றிக்கான பாதையைப் பற்றியும் வந்திருந்தவர்களிடம் பகிர்ந்து கொண்டார். கோரி பிரையன், ஏீ கார்ப்பரேட் சர்வீசஸ் மற்றும் ஸ்காபரோ ஹெல்த் நெட்வொர்க்கின் CFO ஸ்காபரோ ஹெல்த் நெட்வொர்க்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி வலுவான சமுதாயத்தை உருவாக்குவதில் சமூக ஆரோக்கியம் மற்றும் அதிகாரமளிப்பு ஆகியவற்றின் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் ஒரு சிறப்புரையை வழங்கினார்.

மேட் இன் முல்லைத்தீவு முயற்சியானது அதன் இரண்டாம் கட்டத்திற்கு நகர்வது தொடர்பான அறிவிப்பானது நிகழ்வின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். முல்லைத்தீவில் ஒரு காட்சியரை திறக்கப்படவுள்ள முயற்சிகள் தொடர்பில் பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப் பட்டது. மேட் இன் முல்லைத்தீவு காட்சியறையானது பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான ஒரு படி மட்டுமல்ல் பெண்கள் நீதி சுதந்திரத்தையும் வலிமையையும் அடையக்கூடிய சமூக சூழலை வளர்ப்பதாகவும் அமையும். இந்த காட்சியறை எதிர்வரும் மாதங்களில் ஸ்தாபிக்கப் படவுள்ளதுடன், முல்லைத்தீவு நகரின் மையப்பகுதியில் அதன் புதிய பஸ் நிலைய வளாகத்தில் அமையவுள்ளது. அதிக எண்ணிக்கையிலான உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு ஆதரவளிக்கும் இந்த காட்சியறைக்கு நிதியளிக்க CTC உறுதியளித்துள்ளது. கனடிய தமிழர் பேரவையின் இந்த முக்கிய முயற்சிக்கு ஆதரவளிக்கும் முகமாகவும், போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்தும் நோக்குடனும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பலர் புடவைகளை வாங்குவதன் மூலம் ஆதரவளித்திருந்தனர்.



2024 கனடிய தமிழர் பேரவை மகளிர் தலைமைத்துவ விருது கடந்த 40 ஆண்டுகளாக சிறந்த பங்களிப்பு மற்றும் தலைமைத்துவத்துடன் செயற்பட்ட மணி பத்மராஜாவை பாராட்டி வழங்கப் பட்டது. தமிழ் அகதிகளின் வீட்டுத் தேவைகளுக்கு உதவுவதற்காக செனோர் தமிழ் மையத்தை உருவாக்குவதற்கும், தமிழ் கூட்டுறவு கட்டிடத்தை நிறுவுவதற்கும் மணி பத்மராஜா குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளார். மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கும் பெண் தலைவர்களை அங்கீகரித்து கொண்டாடும் சக்திக்கு இந்த தருணம் சான்றாக இருந்தது. இந்த விருதை குமுதினி தவராஜ் அறிமுகப் படுத்தி, டாக்டர் மீரா செல்வகோன் வழங்கினார்.

இந்நிகழ்வில் மருத்துவர் மீரா செல்வகோன் அவர்களால் நடத்தப்பட்ட மருத்துவக் குழு கலந்துரையாடலில், டாக்டர் காயத்திரி நாகநாதன், டாக்டர் நிஷானி உமாசுதன் மற்றும் சமூக சேவகர் ஃபாடியா ஷைதீன் ஆகியோருடன் பல்வேறு உடல்நலம் மற்றும் சமூகப் பிரச்சினைகளை ஆராய்ந்து, நுண்ணறிவுமிக்க முன்னோக்குகளையும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு தொடர்புகளை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்கி இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் போது காலஞ்சென்ற திருமதி சத்தியஜோதி செல்வகோன் அவர்களின் வாழ்நாள் முழுவதும் தமிழ் சமூகத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாலின சமத்துவத்திற்காக வாதிடுவதற்கும், பெண்களின் தலைமையை ஆதரிப்பதற்கும், ஒவ்வொரு பெண்ணின் பங்களிப்பும் மதிக்கப்படும் மற்றும் கொண்டாடப்படும் சமூகத்தை வளர்ப்பதற்கும் கனடிய தமிழர் பேரவை அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதற்கு இந்த நிகழ்வும் ஒரு சான்றாக அமைந்திருந்தது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# பலாலி விமான நிலையத்தை தனியாருக்கு குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானம்



யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை தனியாருக்கு குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்த பின்னர் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இதேவேளை மத்தல விமான நிலையத்தின் செயற்பாடுகளை இந்தியா மற்றும் ரஷ்யாவில் உள்ள இரண்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான பிரேரணை நிதி அமைச்சின் அவதானத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# இனப்பிரச்சனைக்கு 13வது திருத்தத்தையாவது அமுல்படுத்த வேண்டும் -பேராசிரியர் அர்ஜீனா



இலங்கை எதிர்கொள்ளவுள்ள தேர்தல்களில் போட்டியிடவுள்ள அரசியல்வாதிகள் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை காண வேண்டும். குறிப்பாக 13ஆவது திருத்தத்தையாவது உரிய முறையில் அமுல்படுத்த வேண்டும் என பேராசிரியர் அர்ஜீன பராக்கிரம தெரிவித்துள்ளார்.

மார்ச் 12 இயக்கத்தின் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அத்துடன் வடக்கு கிழக்கில் படையினர் ஆக்கிரமித்த பொதுமக்களின் காணிகளை மீளவும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நஷ்டஈட்டை வழங்க வேண்டும். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை நேர்மையாக தெரிவிக்க வேண்டும். சட்டவிரோதமான சட்டங்களை இல்லாது ஒழிக்க வேண்டும். இந்த நாடு ஜனநாய நாடு என்ற அடிப்படையில் ஆர்ப்பாட்டங்களை நடத்தும் உரிமை நிலைநிறுத்தப்பட வேண்டும். மலையக மக்களின் காணி உரிமை வீட்டுரிமை ஆகியவற்றை உறுதிப்படுத்தி உத்தரவாதப்படுத்த வேண்டும் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலின் தாக்குதலில் அமெரிக்கத் தொண்டு நிறுவன ஊழியர்கள் 7 பேர் பலி

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் வெளிநாட்டவர்கள் உட்பட தனது ஊழியர்கள் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என அமெரிக்காவை தளமாகக் கொண்ட வேர்ல்ட் சென்ட்ரல் கிச்சன் எனும் தொண்டு நிறுவனம் இன்று தெரிவித்துள்ளது. இதையடுத்து காஸாவில் தனது பணிகளை இடைநிறுத்துவதாகவும் அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சைப்பிரஸிலிருந்து கடல்வழியாக அனுப்பப்பட்ட உணவுப் பொருட்களை களஞ்சியமொன்றில் இறக்கிவிட்டு வாகனங்களில் சென்று கொண்டிருந்த போது இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக வேர்ல்ட் சென்ட்ரல் கிச்சன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா, போலந்து, பிரிட்டன் நாடுகளைச் சேர்ந்தவர்களுடன் அமெரிக்க கனேடிய இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்ட ஒருவர் மற்றும் பலஸ்தீனியர் ஒருவர் இச் சம்பவத்தில் உயிரிழந்தனர் என அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் காஸாவில் தொண்டு நிறுவன ஊழியர்கள் 7 பேர் கொல்லப்பட்ட தாக்குதல் ஒரு கடுமையான தவறு என இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளின் தலைவர் ஹேர்ஸி ஹலேவி தெரிவித்துள்ளார். இச்சம்பவம் ஒரு கடுமையான தவறு. அது நடந்திருக்கக் கூடாது' என அவர் கூறியுள்ளார். இதேவேளை இத் தாக்குதல் தொடர்பான தனது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதற்கும் மன்னிப்பு கோருவதற்காகவும் வேர்ல்ட் சென்ட்ரல் கிச்சன் நிறுவனத்தின் தலைவர் ஜோஸ் அன்ரெஸூடன் தான் உரையாடியதாக இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹேர்ஸோக் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் வேண்டுமென்றே நடத்தப்பட்டதல்ல என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹு கூறியுள்ளார். எனினும் அவர் மன்னிப்பு கோரவில்லை. இது ஒரு துயர சம்பவம் எனக் கூறியுள்ள அவர், இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் எனக் கூறியுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் தாக்குதலைக் கண்டித்துள்ளார்.

# இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர் அமெரிக்க தேசிய பாதுகாப்புக் கல்விசபை ஆலோசகர்



இலங்கையைப் பூர்விகமாகக் கொண்ட அமெரிக்க இராஜதந்திரியான கலாநிதி பற்றிக் மெண்டிஸ் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக் கல்வி சபையின் ஆலோசகராக ஜனாதிபதி ஜோ பைடனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் பொலனறுவை மாவட்டத்தில் 1960 ஆம் ஆண்டு பிறந்த பற்றிக் மெண்டிஸ், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக கடமையாற்றியிருப்பதுடன், 'சர்வோதயம்' அமைப்பு, சாரணர் இயக்கம், பொலிஸ் மற்றும் இராணுவப் பயிற்சி கடேற்ஸ் போன்ற பல்வேறு அமைப்புக்களில் இணைந்து முனைப்புடன் இயங்கி வந்திருக்கின்றார்.

இலங்கையிலும், அமெரிக்காவிலும் தனது கல்வியை நிறைவு செய்த அவர், அமெரிக்காவில் நீண்ட காலமாக முக்கிய பல இராஜதந்திர பதவிகளை வகித்துள்ளார்.

குறிப்பாக நேட்டோவின் இராணுவப் பேராசிரியராக கடமையாற்றிய அவர், கிளின்டன், ஜோர்ஜ் புஷ், ஒபாமா ஆகியோரின் நிர்வாகத்தின் கீழ் இந்திய பசுபிக் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார். அது மாத்திரமன்றி அவர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் விவசாயம், பாதுகாப்பு, வலுசக்தி உள்ளிட்ட துறைசார் பிரிவுகளில் உயர் பதவிகளை வகித்துள்ளார். அதன் நீட்சியாக தற்போது அவர் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கல்வி சபையின் ஆலோசகராக ஜனாதிபதி ஜோ பைடனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# கச்சதீவு அரசியல்

இந்திய பாராளுமன்றத் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. ஆளும் பாரதிய ஜனதா கட்சி உச்ச பட்சமான தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து தேர்தல் பிரசாரங்களை தீவிரப்படுத்தியிருக்கின்றது. இதே போன்று மறுபுறம் 'இந்தியா' கூட்டணி பாரதிய ஜனதாவை தோற் கடிக்கும் இலக்குக்காகத் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றது.

ஒப்பீட்டடிப்படையில் கடந்த முறை இடம் பெற்ற தேர்தலை விடவும் இம்முறை பாரதிய ஜனதா கட்சி சவாலை எதிர்கொண்டுள்ள தாகத் தகவல்கள் கூறுகின்றன.

ஏனெனில் இம்முறை பாரதிய ஜனதா பெருமெடுப்பில் தனிக்கட்சியாக வெற்றி பெறுமாக இருந்தால் அடுத்து வரவுள்ள இரண்டு தேர்தல்களுக்கு எதிரணியினரால் மேலுக்கு வரவே முடியாமல் போகலாம். இவ்வாறானதொரு நிலையில் இரண்டு அணிகளும் கடுமையான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

பாரதிய ஜனதா கட்சி எதிரணிகள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டிருப்பதாக இந்தியா கூட்டணி குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் நாடு தேர்தல் களம் முன்னர் எப்போதுமில்லாதவாறு தீவிரமடைந்திருக்கின்றது. தேர்தல் பிரசாரங்களின் போது இம்முறை கச்சதீவு பிரதான பேசுபொருளாக மாறியிருக்கின்றது.

தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கையின் மீதும் மத்திய அரசாங்கத்தின் மீதும் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்ற நிலையில் கச்சதீவு விவகாரம் பாரதிய ஜனதா கட்சியால் தேசியவாத நிகழ்ச்சி நிரலாக மாற்றப்பட்டிருக்கின்றது. கச்சதீவை இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியே இலங்கையிடம் பறிகொடுத்ததாக அண்மையில் இந்திய பிரதமர் மோடி தமிழ்நாட்டில் வைத்து தெரிவித்திருந்தார்.

தற்போது அதே கருத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார். காங்கிரஸ் கட்சியே இரு நாடுகளுக்கான எல்லை நிர்ணயத்தின்போது கச்சதீவை எந்தப் பக்கம் வைப்பது என்னும் தீர்மானத்தின் போது இலங்கையின் பக்கமாக வைத்தது என்று ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார்.

கச்சதீவை மீளவும் எடுக்க வேண்டும் என்னும் கோரிக்கை தமிழ் நாட்டு அரசாங்கங்களால் காலத்துக்குக் காலம் முன் வைக்கப்பட்டு வருகின்றது. இதற்கு ஒரு காரணமுண்டு. இந்திராகாந்தி இந்த உடன்பாட்டை செய்தபோது தமிழ்நாட்டு அரசாங்கத்தோடு ஆகக் குறைந்தது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியுடன் கூட கலந்துரையாடி யிருக்கவில்லை. அவர்களின் சம்மதம் இன்றியே இந்த உடன்பாடு செய்யப்பட்டது.

இதன் காரணமாகவே தமிழ்நாட்டு அரசியலில் கச்சதீவு தொடர்ந்தும் சர்ச்சைக்குரிய விடயமாக நோக்கப்படுகின்றது. கருணாநிதி மற்றும் ஜெயலலிதா ஆகிய இரு முதலமைச்சர்களுமே கச்சதீவை மீளவும் எடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை கோரி வந்திருக்கின்றனர். ஜெயலலிதா இது தொடர்பில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு தீர்மானமும் கொண்டு வந்திருந்தார். இது தொடர்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

மத்திய அரசு சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் அது இரு நாட்டு உடன்பாடுகளின் அடிப்படையில் இந்தியாவால் வழங்கப்பட்ட விடயம். அதனை இனிப் பெற முடியாது இதனையும் மீறிப் பெற வேண்டுமானால் யுத்தம்தான் செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ்நாட்டில் காலூன்றும் முயற்சிகளை தீவிரப்படுத்தியிருக்கும் பாரதிய ஜனதா கட்சி கச்சதீவை காங்கிரஸூக்கு எதிரான வலுவான துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த முற்படுகின்றது.

ஒரு விடயம் காலம் கடந்தும் எவ்வாறு உள்ளூர் அரசியலுக்கு பயன்பட முடியுமென்பதற்கு கச்சதீவு ஒரு நல்ல உதாரணம்.

(20ம் பக்கத் தொடர்ச்சி) பிம்பத்தை பாரதிய ஜனதா மாற்ற எத்தனிக்கின்றது. எது எப்படியாகிலும், தமிழ்நாட்டில் கையளவு வெற்றியையேனும் பெற்று விடவேண்டும் என மோடி தலையால் தண்ணீர் குடிக்கின்றார். தமிழ்மொழியின் அருமை பெருமைகளைப் பேசுகின்றார். தமிழ்நாட்டுக்கு வரும் போது புதிய சக்தி பிறக்கிறது என்கிறார். தமிழ்நாட்டிலே இருமல் தும்மல் சத்தம் கேட்டால் போதும். உடனேயே பிளேன் பிடித்து வந்து இறங்கி விடுகின்றார். இவையெல்லாம் உச்சி வெய்யிலில் வெண்ணெய் விற்ற கதையாகி விடுமா என்பது தேர்தல் முடிவு வரும்போது தெரிந்து விடும்.

# கார்த்திகைப் பூ அல்ல காந்தள் பூ :- ஆசிரியர்களுக்கு “சப்றைஸ்” கொடுக்கவே செய்தோமென பொலிசாருக்கு வகுப்பெடுத்த மாணவர்கள்

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் பாடசாலையொன்றில் இடம் பெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் கார்த்திகைப் பூ மற்றும் இராணுவ வாகனத்தை ஒத்த அலங்காரங்கள் கடந்த 30 மார்ச் 2024 சனிக்கிழமை காட்சிப்படுத்தப்பட்டது. குறித்த விடயம் தொடர்பில் தெல்லிப் பழை பொலிஸார் சில மாணவர்களையும் ஆசிரியர்களையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வருமாறு அழைத்தனர்.



விசாரணைக்காக மூன்று மாணவர்கள் சென்றதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் பொலிஸார் விசாரணையில் நீங்கள் இல்ல அலங்காரம் செய்தது கார்த்திகைப் பூவைத் தானே இதற்கான ஆலோசனைகளை ஆசிரியர்கள் தானே வழங்கினார்கள் என கேள்வி எழுப்பினார்.

இதன் போது பதில் வழங்கிய மாணவர்கள் நீங்கள் கூறுவதைப் போல குறித்த பூ கார்த்திகைப் பூ என நாங்கள் அறிந்திருக்கவில்லை காந்தள் மலர் என அறிந்துள்ளோம் எமது பாடப்புத்தகத்தில் அவ்வாறே உள்ளது.

அது மட்டுமல்லாது வருடத்தில் ஒரு முறை பூக்கும் அரிய மலர் அதனை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே காட்சிப்படுத்தினோம்.

இதன் போது கேள்வி எழுப்பிய பொலிஸார் உங்கள் இல்ல அலங்காரத்திற்கான ஆலோசனையை ஆசிரியர்கள் தானே வழங்கினார்கள் எனக் கேள்வி எழுப்பினார்.

இதன் போது பதிலளித்த மாணவர்கள் ஆசிரியர்களுக்கும் காந்தள் பூ இல்ல அலங்காரத்திற்கும் தொடர்பு இல்லை நாங்கள் இவ்வாறு அமைக்கப் போகிறோம் என அவர்களுக்கு தெரியப்படுத்தவும் இல்லை 'சப்றைஸ்' வழங்க வேண்டும் என்பதற்காக தெரியாமல் வைத்தோம் என்றனராம். இதன் போது பல்வேறு வழிகளில் குறித்த இல்ல அலங்காரத்திற்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் முடிச்சுப் போட பொலிஸார் முனைந்த நிலையிலும் மாணவர்கள் ஒரே பதிலையை மீண்டும் மீண்டும் கூறினர்

இந் நிலையில் பாடசாலை அதிபரும் பொலிஸ் நிலையத்திற்கு வாக்கு மூலம் வழங்க அழைக்கப்பட்ட நிலையில் தனது வாக்குமூலத்தில் ஏற்கனவே இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கான பாடசாலை ஆசிரியர்கள் கூட்டத்தில் தெளிவாக கூறினேன். ஏற்கனவே கிளிநொச்சியில் இடம் பெற்ற இல்ல அலங்காரம் அது தொடர்பில் எழுந்த சர்ச்சை தொடர்பில் கூட்டத்தில் தெரிவித்தேன். இவ்வாறான அலங்காரம் தொடர்பில் தானும் அறிந்திருக்க வில்லை என வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மனிதஉரிமைகள் ஆணைக்குழவில் முறைப்பாடு

பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பொலிஸாரினதும் அரச புலனாய்வாளரினதும் இராணுவத்தினரின் தலையீடுகள் மற்றும் விசாரணை செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக என இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன் தீலீசன் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலையே அவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

பாடசாலைகளில் நடைபெற்று வரும் இல்ல விளையாட்டு நிகழ்வுகளில் அலங்கரிக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் பொலிஸாரினதும் இராணுவத்தினரதும், அரச புலனாய் வாளர்களினதும் அச்சுறுத்தல் இடம் பெற்று வருவது தனிமனித சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரங்களை நசுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்களாகும். இலங்கை அரசின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும் கலை ரீதியாகவும் குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் சமூகம் சார் பிரக்ஞைகளை வெளிப்படுத்தும் போது, அதனை அரச இயந்திரங்களால் நசுக்கும் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு அனுமதிக்க முடியாது. இதற்கு கல்வி திணைக்களங்களும் துணை போகுமானால், கல்விக்குள் இராணுவ மற்றும் பொலிஸ் தலையீடு களை ஆதரிக்கும் செயற்பாடுகளாகவே இவை அமையும்.

அண்மையில் நடைபெற்ற தெல்லிப் பழை பாடசாலையொன்றில் இல்ல மெய்வன்மை போட்டியின், இல்ல அலங்காரங்களில் மாணவர்கள் வெளிப்படுத்திய வெளிப்பாடுகள், இலங்கை அரசியலமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனச்சாட்சி சுதந்திரத்துக்கு உட்பட்டதாகும்.

இந்த விடயங்களில் பொலிஸாரோடு இணைந்து வடமாகாண கல்வி அமைச்சும் தலையீடு செய்வதென்பது மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடு எனபதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடாகும்.

இவ்விடயம் தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளோம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொருத்தமான விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# 13ஐ வெட்டித் தள்ளும் ரணில்! 1000 விகாரைகள் இலக்குடன் சஜித்! "எலியட்ட தாண்ட" அணியில் அநுர!

இந்த வருடத்தில் நடைபெற்றேயாக வேண்டிய ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறுமா, இடம் பெறாதா ஒரேயடியாக பின்தள்ளப்பட்டுப் போகுமா என்ற கேள்விகள் அரசியல் கட்சிகளிடையே தொடர்ந்து நிலவி வருகிறது.

இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போன்று, வருகின்ற அக்டோபர் மாத முதலாவது சனிக்கிழமை (5ம் திகதி) தேர்தல் நடைபெறுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.





இந்த அறிவிப்பு எத்தனை அவுன்ஸ் நம்பகத்தன்மை கொண்டதென்ற அடுத்த கேள்வி இப்போது முனைப்புப் பெற்று நிற்கிறது. இதற்கான முதற் காரணம், ரணிலை ஜனாதிபதி அரியாசனத்திலேற்றி இன்று வரை இறக்காமல் பாதுகாத்து வருகின்ற பொதுஜன பெரமுன நாடாளுமன்ற தேர்தலை முதலில் நடத்த வேண்டுமென அடாப்பிடியாக நிற்பதே.

இந்தக் கோரிக்கையை ரணிலிடம் நேரடியாக முன்வைத்தவர் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பசில் ராஜபக்ச. எதற்குமே நேரடியாகப் பதிலளிக்காது அலைக்கழித்து வரும் ரணில், ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் கட்டாயம் நடத்தப்பட வேண்டியது என்று மட்டும் நாசூக்காக பதிலளித்து விட்டு,தேர்தலுக்கான அக்டோபர் 5ம் திகதியை வெளியிட்டார்.

ரணிலிடம் தமது பருப்பு அவியாது என்பதைப் புரிந்து கொண்ட பசில், அண்மையில் இடம்பெற்ற பொதுஜன பெரமுன செயற்குழுக் கூட்டத்தில் நான் பொதுத்தேர்தலை முதலில் நடத்துமாறு ரணிலிடம் கோரினேன். அதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை. எனவே அவரது விருப்பம் போல் செயற்படுமாறு கூறினேன் என்று தமது இன்றைய நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

இதனாலோ என்னவோ பெரமுனவின் தேசிய அமைப்பாளராக குட்டி ராசா நாமல் ராஜபக்சவை கட்சி நியமித்துள்ளது. நாமலை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த வேண்டுமென விடாப்பிடியாக கேட்டு வரும் கட்சியின் ஓர் அணியினருக்கு இது வாய்ப்பாகப் போயிற்று. இவர்கள் தொடர்ந்து அந்த வாய்ப்பாட்டையே வாசித்து வருகின்றனர்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க சிறிமாவோ பண்டாரநாயக்க தம்பதியினரின் ஏகபுதல்வரான அனுர பண்டாரநாயக்கவும் இன்றைய நாமல் ராஜபக்ச போன்று உயர்மட்டத்தில் வைத்துப் பார்க்கப்பட்டவர். தமது பெற்றோர் அமர்ந்த ஆசனத்தில் (அப்போது பிரதமர் பதவி) தாமும் ஏற வேண்டுமென துடியாய்த் துடித்தவர் அனுர பண்டாரநாயக்க. ஒரு கட்டத்தில் தமது தந்தை உருவாக்கிய சிறீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து சபா நாயகர் பதவியைப் பெற்றவர்.

பொறுமை காத்து அவர் அரசியல் செய்திருந்தால் அவரது சகோதரி சந்திரிகா குமாரதுங்க பெற்ற பிரதமர் மற்றும் ஜனாதிபதிப் பதவிகள் அவருக்கே கிடைத்திருக்க வேண்டியவை. வெள்ளை மாடு கொழுத்தாலும் வழுவழுப்பு நீங்காது என்பது போல அனுர பண்டாரநாயக்க பெயரளவில் குடும்ப வாரிசாக உயர்ந்திருந்தாலும் அரசியல் செயற்பாட்டிலும் அந்த நிலைக்கு வளர்ந்திராததால் எல்லாமே பொரிமாத் தோண்டி கதையானது வரலாறு.

இந்த அரிச்சுவட்டிலேயே நாமலும் இன்று நடைபயில்கிறார். ரணிலும் நாமலும் மலையும் மடுவும் போன்றவர்கள். இதனை நன்கு புரிந்து கொண்டதால் தான் நாமல் இப்போது ஜனாதிபதிப் போட்டியில் இறங்குவதை அவரது தந்தை மகிந்த விரும்பவில்லை. இன்னுமொரு ஐந்து ஆண்டுகள் நம்மடை ஆள் ரணில் ஜனாதிபதியாக இருப்பாரானால், அடுத்து வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் வயதாலும் அனுபவத்தாலும் தகுதி பெற்று விடுவாரென்று மகிந்த கருதுகிறார். ஏறத்தாழ பசிலும் இப்போது அந்த நிலைப்பாட்டுக்கு வந்து விட்டார். அதனாற் தான், நெருக்கடியான நேரத் தில் ஆட்சியை பொறுப்பேற்ற ரணில் பொருளாதார ரீதியாக நாட்டைக் காப்பாற்றி (தங்களையும் காப்பாற்றினாரென பகிரங்கமாகக் குறிப்பிடாமல்) மக்களுக்கு பசி நீக்குகிறார் என்று சான்றிதழ் கொடுத்துள்ளார்.

பசில் இவ்வாறான முடிவெடுத்ததற்கு மூன்று காரணங்கள் உண்டு. 1. ரணிலுக்கெதிராக பெரமுன ஒருவரை களமிறக்கினால் ஏற்கனவே அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்களாக இருப்பவர்கள் ரணிலின் பக்கம் செல்வர். இதனால் பெரமுன பிளவடையும். 2. எக்காரணம் கொண்டும் ஜே.வி.பி. வேட்பாளர் அனுர குமார வெற்றி பெறுவதை அனுமதிக்கக்கூடாது. 3. சஜித் பிரேமதாசவின் எதிர்காலத்தை சூனியமாக்கி அரசிலிருந்து அப்புறப்படுத்த ஒரேவழி ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்குவதே.

ஆக, இன்றைய களநிலைவரப்படி ஆட்சித் தரப்பின் ஆதரவோடு ரணில் ஜனாதிபதி வேட்பாளராகிறார் என்பது நம்பக்கூடிய நிச்சயமாகிறது.

எனினும், ரணில் தொடர்ந்து பெரமுன, சஜித் அணி ஆகியவற்றை பிய்த்தெறியும் கைங்கரியங்களிலேயே ஈடுபட்டு வருகிறார். அதேசமயம் நாடு முழுவதும் சென்று தேர்தல் அட்வான்ஸ் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார். அதிகாரபூர்வமாக வெசாக் தினத்தின் பின்னரேயே தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகுமெனை அறிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 17க்கும் அக்டோபர் 17க்குமிடையில் நடைபெறுமென்று நம்ப வைக்கும் அறிவிப்புகளையும் விடுத்து வருகின்றார்.

கடந்த ஒருவாரத்தில் பருத்தித்துறை, றாகம மருத்துவமனைகளில் புதிய கட்டிடங்களை கையளித்தது, நாட்டின் மிகப்பெரிய மகப்பேற்று மருத்துவமனையை காலியில் திறந்து வைத்தது, அரச ஊழியர்களுக்கு ஏப்ரலில் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு, ஓய்வுதியகாரர்களுக்கு ஐயாயிரம் ரூபா சம்பள உயர்வு, பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு என பல நிகழ்ச்சிகளில் ரணில் நேரடியாக பங்கேற்று வருவதானது, 'ஐயா லெக்‌ஷன் கேட்கிறார்' என்ற பிரபல நாடகத்தை நினைவுட்டுகிறது.

இப்படியான சாதக சமிக்ஞைகள் காணப்படும் அதேசமயம், தேர்தலுக்குப் பொறுப்பான தேர்தல் ஆணையாளர் இரண்டு விடயங்களை அறிவித்து அரசியலில் திடீர் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் இவ்வருடத்தில் நடத்தக்கூடிய வலுவுடன் தேர்தல் திணைக்களம் இருப்பதாகவும், ஜனாதிபதித் தேர்தலை செப்டம்பர் 18ம் திகதி நடத்தினால் நல்லது எனவும் இவர் தெரிவித்ததாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தேர்தல் திணைக்களம் தான் தேர்தல்களை நடத்தினாலும் ஆட்சித் தரப்பில் ஜனாதிபதி தமக்கான சகல நிறைவேற்று அதிகாரங்களையும் பயன்படுத்தி முடிவெடுப்பார் என்பதே யதார்த்தம்.

கடந்த வருடம் உள்ராட்சித் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை விடுத்த தேர்தல் திணைக்களம் அதற்கான திகதி அறிவித்து, அபேட்சகர் கட்டுப் பணம் செலுத்தி வாக்குச் சீட்டுகளையும் அச்சடித்துக் கொண்டிருந்த வேளையில் தேர்தலுக்குப் பொறுப்பு தேர்தல் ஆணையாளர் வாக்குப் பெட்டி ஜனாதிபதியின் கைகளில் என்ற தலைப்பில் இந்தப் பத்தியில் எழுதப்பட்டது ஞாபகம் இருக்கிறது. அச்சொட்டாக அவ்வாறே தேர்தல் ரத்தானது. இன்றுவரை தேர்தல் நடைபெறவில்லை. இதனை அரசியல் கட்சிகளும் மறந்தே விட்டனர். வரப்

**கட்டுரையாளர்**
**- பனங்காட்டான் -**

போகும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, அனுர குமார திசநாயக்க, சஜித் பிரேமதாச ஆகியோர் போட்டியிடுவது ஓரளவுக்கு உறுதியாகியுள்ளது. மேலும் ஐந்தோ பத்துப் பேர் போட்டியிடக்கூடும்.

தாம் அமைச்சராக இருந்த போது ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசினால் ராஜிவ் அரசுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தால் உருவான பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாதென ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக தெரிவித்துள்ளார். மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் இருக்குமென கூறிவரும் அவரது ஆட்சியிலேயே அந்த அதிகாரங்களை மத்திய அரசு பயன்படுத்தி தமிழர் பிரதேச காணிகளும் வழிபாட்டுக்குரிய நிலங்களும் அபகரிக்கப்படுகின்றன.

வடக்கில் ஆயிரம் விகாரைகள் கட்டுவேனென்று தெரிவித்த சஜித் பிரேமதாசவிடம் தமிழர் பிரச்சனைக்கான தீர்வுத் திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜே.வி.பி. வேட்பாளர் அனுர குமார திசநாயக்க புனித கங்கையில் நீராடி புனிதமான மனிதராக காட்சி கொடுக்க முனைகிறார். தமிழர் வாக்குகளை இலக்கு வைத்து அண்மையில் வடக்கே சென்ற இவர் கிழக்குக்கும் செல்லப் போகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக இம்மாத நடுப்பகுதியில் கனடாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பங்கேற்ற ரொறன்ரோ கூட்டத்தில் சுமார் இரு நூறு வரையான தமிழர்களும் பங்கு பற்றினர். இமாலய பிரகடனத்தினால் சிக்கலுக்குள்ளாகியிருக்கும் தமிழர் அமைப்பின் பிரதிநிதிகளும் இங்கே காணப்பட்டனர்.

அனுர குமார திசநாயக்க தமது தாய் மொழியான சிங்களத்தில் உரையாற்றினார். இதனை தமிழில் கேட்க அதற்கான செயலி வழங்கப்பட்டது. சில நிமிடங்களில் அது இயங்காமல் போயிற்று. 'தமிழில் மொழிபெயர்ப்புத் தாருங்கள்' என தமிழர் ஒருவர் வேண்டினார். மேடையிலிருந்த பிரமுகர் ஒருவரிடமிருந்து 'எலியட்ட தாண்ட' எனப் பதில் வந்தது. இதன் அர்த்தம் வெளியே போ என்பது.

தமிழர் பிரச்சனைத் தீர்வுக்கென உருவான பதின்மூன்றாம் திருத்தத்தை வெட்டித் தள்ளும் வேலையில் ரணில் முனைப்பாக உள்ளார். வடக்கில் ஆயிரம் விகாரைகள் கட்டும் தமது எண்ணத்தை நிறைவேற்ற சஜித் ஆவலுடன் காத்திருக்கிறார். அனுர குமாரவின் மொழிக் கொள்கை என்ன என்பதற்கு கனடாக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட பதில் போதும். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமானால், இவைகளுக்குப் பதிலளிப்பதற்கான ஒரே தீர்வு தமிழர் தரப்பிலிருந்து பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதுதான் என்றால் தவறிருக்காது!

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள்.

இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

23 மார்ச் 2024 - 29 மார்ச் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தியாகரூபன் தியாகராஜா

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தியாகரூபன் தியாகராஜா அவர்களுடைய 9வது ஆண்டு நினைவு நாள் 02 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தியாகரூபன் தியாகராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் மயில்வாகனம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களுடைய முதலாவது ஆண்டு நினைவு நாள் 04 ஏப்ரல் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு பிறேம்குமார்

யாழ்ப்பாணம் அரியாலைப் பிறப்பிடமாகவும் கனடா வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு பிறேம்குமார் அவர்களுடைய நான்காவது ஆண்டு நினைவு நாள் 30 மார்ச் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு பிறேம்குமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு நடராஜா சிதம்பரநாதன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 01ஏப்ரல் 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவஞ்சலிகள்



### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 01 ஏப்ரல் 2024 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் இணையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினி அம்மா வைத்தியநாதன் அவர்களின் ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 28 மார்ச் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 60வது ஆண்டுசிரார்த்த தினம்



### திரு சுப்பிரமணியம் கந்தையா
### திருமதி பார்வதி கந்தையா

அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது 60வது ஆண்டு சிரார்த்த தினம் 07 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



25 மார்ச் 2025 திங்கட்கிழமை அனைத்துக் குழந்தைகளுக்கும் கதிர்காம முருகன் அருள் வேண்டிய உபயமாக கனடாவில் வாழும் திருமதி கமலராணி குணபாலசிங்கம் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.



28 மார்ச் 2024 வியாழக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு, வட்டக்கச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினிஅம்மா வைத்தியலிங்கம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



30 மார்ச் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அம்சயன் ஸ்ரீகுமாரின் 14வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் அம்சயன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




30 மார்ச் 2024 சனிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



30 மார்ச் 2024 சனிக்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு பிறேம்குமார் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும்.அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



26 மார்ச் 2024 செல்வி அபிநயா சிவகுகானந்தன் அவர்களின் 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அவரது பெற்றோர்கள் 31 மார்ச் 2024 ஞாயிற்றுக்கிழமை அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 ஏப்ரல் 2024 திங்கட்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் அவர்களது நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழ்கினார்கள்.



01 ஏப்ரல் 2024 திங்கட்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தியாகரூபன் தியாகராஜா அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



03 ஏப்ரல் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மங்களமூர்த்தி செல்வமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜகரிண்யா மங்களமூர்த்தி அவர்களது வருடாந்த ஜனன நட்சத்திர தினமாகும். அன்றைய தினம் செல்வி ஜகரிண்யா தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



04 ஏப்ரல் 2024 வியாழக்கிழமை குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மயில்வாகனம் பாக்கியம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்யைதினம் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





APRIL 20
CANADA EVENT CENTRE
300 WATER ST.
WHITBY, ON
L1N 9B6
AT: 6:00 PM
APRIL 21
GLOBAL KINGDOM
MINISTRIES AUDITORIUM
1250 MARKHAM RD,
SCARBOROUGH, ON M1H 2Y9
(MARKHAM & ELLESMERE
AT 6:00 PM
VENNILA ENTERTAINERS
பெருமையுடன் வழங்கும்
Sa Re Ga Ma Pa
APRIL FEAST 2024
THANKS TO
east FM 102.7
POWERED BY
GURUSOTH
KUMARAGURUPARAN
Mortgage Agent
Srinivas
Vijay Prakash
Sharanya
Namakkal MGR
Archana
Shyamala
Muthuchippi
Jeevan
Naga Arjun
Gopalakrishnan
ARUBA CUSTOM HOMES
416-453-2828
Suresh Renovation
FREE ESTIMATE
647-666-5636
647-763-3237
CYGNUS ALLIANCE
GURUSOTH KUMARAGURUPARAN
647-517-GURU (4878)
cygnusmortgages@gmail.com
RE/MAX METROPOLIS
JENUSHAN VIGNARAJ
647.534.6262
@JENUTHEREALTOR
GLOBAL FINANCIAL SERVICES
Accounting
Insurance
Investment
L13-2900 Markham Rd
Scarborough, ON M1X 1E6
(416) 436 - 9090
(416) 628 - 6331
PURCHASE TICKETS HERE
Tuxedo Drug Mart
EVENT TICKETS AVAILABLE
Fresh Food City
2200 Brock Rd, Pickering, ON L1X 2R2.
freshfoodcity636@gmail.com (905) 426-7722
OPEN - MON - SUN 9:00 AM - 10:00 PM
பூட் சிற்றி உணவகம்
Food City
Take - Out & Catering
905-427-9676
Residence INN
BY MARRIOTT WHITBY
ஈழநாடு
தொடர்புகளுக்கு: 437-234-8040
Ticket: $30 / $50 / VIP

உ

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 | TEL: 416-321-6104 | FAX: 416-321-7557

Website: www.ayyappan.ca | Facebook: Canada Sri Ayyappan Hindu Temple







## ஸ்ரீஐயப்ப சுவாமி விசுக்கனி அலங்கார உற்சவமும், ஐயப்பன் விரத மாலை அணியும் வைபவமும்

## SRI AYYAPPAN GARLANDED OCCASION

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் விசுக்கனி தரிசனத்திற்காக மாலை அணியும் வைபவம் 5.04.2024 வெள்ளிக்கிழமை காலை 7:00 மணிக்கு கணபதி ஹோமத்துடன் விசுக்கனி அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும். உபயங்கள் செய்ய விரும்பும் அடியார்களும் முன்கூட்டியே காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

## நிகழ்ச்சி நிரல்

**கணபதி ஹோமம்**
05.04.2024 வெள்ளி
காலை 7:00 மணி

**மாலை அணிதல்**
05.04.2024 வெள்ளி
காலை 7:00 மணி முதல்
நண்பகல் 12:00 மணிவரை
மாலை 7:00 மணி முதல்
இரவு 8:00 மணி வரை

**நெய் நிரப்புதல்**
12.04.2024 வெள்ளி
காலை 7:00 மணி முதல்
பகல் 11:00 மணி வரை

**சுவாமிமார்கள் 18 படிகள் ஏறி நெய் அபிசேகம்**
13.04.2024 சனிக்கிழமை
காலை 7:00 மணி முதல்
காலை 9:00 மணி வரை

**புதுவருட பிறப்பு பூசை**
13.04.2024 சனி
காலை 10:00 மணிக்கு ஆரம்பம்.

**தேர்த்திருவிழா**
13.04.2024 சனி
மாலை 7:00 மணி

இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை



Founder Dr.CKN has developed innovative products through an unique herbal technology using Tamil science for sustainable healthy liviing

647-594-8910
info@canameagle.com

CANAM EAGLE®
Enterprises Inc.

ஆரோக்கியமான நோயற்ற வாழ்க்கைக்கு?
DESIGN YOUR HEALTHY LIFE





canameagle.com


**நன்னீர் என்றால் என்ன?**

பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களையும் ஆதரிக்கும் இயற்கையின் மிக உயர்ந்த படைப்பான தண்ணீருக்குப் பின்னால் பல ரகசியங்கள் உள்ளன. நவீன விஞ்ஞானம் கடந்த 120 ஆண்டுகளாக நீரின் அற்புதமான மர்மத்தைப் புரிந்து கொள்ள கடினமாக உழைத்து வருகிறது, ஆனால் தண்ணீருக்குப் பின்னால் உள்ள இயற்கையின் சாரத்தை உடைக்க முடியவில்லை.பழங்காலத் தமிழர் வாழ்வியலானது அவர்களின் அறிவார்ந்த வெளிப்பாட்டால் மிக உயர்ந்தது, மனித ஆரோக்கியத்தையும் விலங்குகளின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க நன்னீரை உருவாக்கியது..நன்னீர் என்பது நீர் சார்ந்த உணவுப் பொருள், மருந்து அல்ல.

நீரிழிவு நோயாளிகள் அனைவரும் நன்னீரை உட்கொள்ள வேண்டும், இது இரத்த குளுக்கோஸ் மேலாண்மைக்கு உதவும்.
சர்க்கரை நோய் இல்லாதவர்கள் தினமும் நன்னீரை சாப்பிட்டு வர இரத்த சுத்திகரிப்பு பலனடையும்.

**லிவர் புரோ என்றால் என்ன?**

கல்லீரல் ஆரோக்கியத்தின் நலனுக்காக தாவர இராச்சியத்தின் தனித்துவமான உருவாக்கத்தைப் புரிந்துகொண்டு, CKN இன்னோவேஷன்ஸ், இந்த தயாரிப்பை உருவாக்கியது, இது நீர் சார்ந்த காய்கறி சாறு ஆகும்.

இன்றைய மனித மக்கள் ஆரோக்கியமற்ற சுற்றுச்சூழல் வாழ்க்கைக்கு ஆளாகின்றனர். சுண்டைக்காய், குப்பி பூசணி, பெருங்காயம், வெள்ளரிக்காய், வெள்ளரிக்காய் ஆகிய ஐந்து காய்கறிகளும் ஆரோக்கியமாக வாழ்க்கைக்கு ஊக்குவிக்கின்றன. லிவர் புரோ என்பது நீர் சார்ந்த உணவுப் பொருள், மருந்து அல்ல.

**மூலிகை ஆரோக்கியம்(ஹெர்பால் புரோ) என்றால் என்ன?**

ஹெர்பால் புரோ ஆரோக்கியம் என்பது புரட்சியின் விளைபொருளாகும். இந்த தயாரிப்பு நீர் சார்ந்த தாவரவியல் சாறு.. தாவரவியல் இராச்சியத்தின் ஐந்து முக்கிய உருவாக்கம் ஹெர்பால் புரோ உருவாக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த பொருட்கள் மனித இரத்தத்தின் பிளாஸ்மாவை தொடர்ந்து சுத்தப்படுத்த தேவையான முக்கிய ஊட்டச்சத்து. ஹெர்பால் புரோ என்பது நீர் சார்ந்த உணவுப் பொருள், மருந்து அல்ல.

Canam Eagle Enterprise Inc. is involved in the importation of CKN Innovations products from India and subsequently resells them in Canada and the United States of America.

**SUGARLIF இன் சர்க்கரை என்றால் என்ன?**

SUGARLIF சர்க்கரை என்பது உலகிலேயே முதல் வகைப் பொருளாகும்-சாதாரண கரும்புச் சர்க்கரையில் குறைந்த GI.க்கு இயற்கையாகவே மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

SUGARLIF சர்க்கரை அதன் குறைந்த GI பண்புக்காக GI Labs in the world including **GI Labs, Canada, Now Inquis Labs** and also multiple studies done at **Whistlers centre for Carbohydrate research, Purdue University in USA**. மையத்தில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

சுகர்லிஃப் சர்க்கரையானது கரும்புச் சர்க்கரையுடன் நமது தனியுரிம அக்வஸ் (**aqueous solution**) கரைசலைக் கலப்பதன் மூலம் செயலாக்கப்படுகிறது. கரைசல் நீர்நிலையானது மற்றும் பிரித்தெடுக்கும் செயல்பாட்டில் இரசாயனங்கள் அல்லது கரைப்பான்கள் பயன்படுத்தப்படுவதில்லை. கரைசலில் உள்ள செயலில் உள்ள பொருட்கள் கிளைசெமிக் குறியீட்டைக் குறைக்கும் பண்புகளைக் கொண்டுள்ளன, அவை இரத்த சர்க்கரை அளவை சீராக வைத்திருப்பது மட்டுமல்லாமல், கொழுப்பை மிகவும் திறம்பட வளர்சிதை மாற்றத்திற்கு உதவுகின்றன, ஆனால் செல்லுலார் மட்டத்தில் குளுக்கோஸை சிறப்பாக உறிஞ்சுவதற்கும் உதவுகின்றன.
இன்று சந்தையில் கிடைக்கும் ஸ்டீவியா(**artificial sweeteners or sugar substitutes)** உட்பட செயற்கை இனிப்புகள் அல்லது சர்க்கரை மாற்றீடுகள் போன்ற பக்கவிளைவுகள் Sugarlif இல் இல்லை.

**மூலிகை உப்பு என்றால் என்ன?**

உலகிலேயே முதன்முறையாக மூலிகை உப்பு மூலம் கார்போஹைட்ரேட்டுகளை நீரிழிவு நோய்க்கு உகந்ததாக மாற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்து துறையில் புரட்சிகர முன்னேற்றம்.

காலத்தின் தேவை

நீரிழிவு நோயைத் தடுப்பதற்கான ஒரு நல்ல நோக்கத்துடன் கூடிய முயற்சியாக, புரட்சியும் சமையலுக்கு மூலிகை உப்பைக் கொண்டு வந்துள்ளது. மூலிகை உப்பு, காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள், அரிசி மற்றும் கோதுமை தயாரிப்புகளில் பயன்படுத்தப்படும் போது, குளுக்கோஸ்-மாற்றம் மற்றும் மனித செல்களுக்கு அதன் விநியோகம் எளிதாகவும் வேகமாகவும் செய்கிறது. எனவே கார்போஹைட்ரேட் காரணமாக இரத்த குளுக்கோஸ் அளவு அதிகரிப்பதில்லை.


#1 RE/MAX



$1,150,000
$1,215,000
SOLD for Higher Price
17 Barlow Rd.
Markham & Ellemere
1336 Pharmacy Ave.
Ellesmere Rd. & Pharmacy Ave.

Fast Sale!
Want to BUY for a lower price?
Higher Price!!
Want to SELL for a higher price?



For More Information
Please Call
Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
KAMAL NAVARATNAM

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

RE MAX Community Realty Inc.
Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9

Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated

Trusted and reliable services

# தமிழ் பொது வேட்பாளர்:- யாரால்? யாருக்கு? யாருக்காக?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



சில மாதங்களுக்கு முன்பு வடமராட்சி கட்டை வேலி கிராமத்தில் ஒரு மக்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. சம கால நிலைமைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் நோக்கிலான அச் சந்திப்பின் போது வளவாளர் அங்கு வந்திருந்த மக்களை நோக்கி பல்வேறு கேள்விகளையும் கேட்டார்.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் யாருக்கு வாக்களிக்க விரும்புகிறார்கள்? ஏன் வாக்களிக்க விரும்புகிறார்கள்? என்றும் கேட்டார். கேள்விகளின் போக்கில் அவர் ஒரு கட்டத்தில் கேட்டார். தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் அவருக்கு நீங்கள் வாக்களிப்பீர்களா? என்று. அங்கு கூடியிருந்த பொதுமக்கள் ஏறக்குறைய ஒரே குரலில் ஆம் என்று பதிலளித்தார்கள். அதில் யாரோ ஒரு பெண் இரகசியமான குரலில் சொன்னார் அந்தப் பொது வேட்பாளர் தமிழ் ஈழம் கேட்டால் சந்தோஷமாக வாக்களிப்போம் என்று.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை, சில மாதங்களுக்கு முன்னரே ஈபிஆர்எல் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் முன் வைத்தார். அதன் பின் அவர் அங்கம் வகிக்கும் குத்துவிளக்குக் கூட்டணி அதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது. அதன் பின் விக்னேஸ்வரன் அவ்வாறு ஒரு பொது வேட்பாளராக நிற்பதற்குத் தான் தயார் என்று அறிவித்திருந்தார்.

இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சி அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை இன்று வரை வெளிப்படுத்தவில்லை. அவ்வாறு ஒருமித்த முடிவை எடுக்க முடியாதபடி அக்கட்சி நீதிமன்றம் ஏறிக் கொண்டிருக்கிறது. எனினும், தமிழரசுக் கட்சிக்குள் தேர்தல் நடப்பதற்கு முன்பு சாணக்கியன் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதேசமயம் அண்மையில் டான் டிவி நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு சிவில் சமூகம் ஒழுங்குபடுத்திய ஒரு கருத்தரங்கில் பேசிய சிறீதரன் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் கருத்துரைத்துள்ளார்.




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழமை போல தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போகின்றது. இதனிடையே, புலம் பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர் ஒருவருடைய தூதுவர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட புலம் பெயர்ந்த தமிழர் ஒருவர், சில மாதங்களுக்கு முன், தமிழ்க் கட்சிகள் சிலவற்றோடு உரையாடியிருக்கிறார்.

குறிப்பிட்ட முதலீட்டாளர் தென்னிலங்கையில் உள்ள இரண்டு கட்சிப் பதிவுகளை விலைக்கு வாங்கி வைத்திருப்பதாகவும், அதில் ஒரு கட்சியின் பதிவின் கீழ் தமிழ் கட்சிகளை ஒன்றிணைத்து ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த முயற்சிப்பதாகவும் கூறப்பட்டது. அத் தமிழ்ப் பொது வேட்பாளர், தமிழ் வாக்குகளை ஒன்று திரட்டி ரணில் விக்ரமசிங்கவை நோக்கித் திருப்புவார் என்றும் கூறப்பட்டுள்ளது. அதாவது ரணிலை வெல்ல வைப்பதற்கே அந்த முயற்சி என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் அக்கோரிக்கைக்கு இணங்கவில்லை என்றும் தெரிகிறது.

அதேசமயம் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட டான் டிவி ஒரு சிவில் சமூகத்தை முன்னிறுத்தி, தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக ஒரு கருத்தரங்கை சில கிழமைகளுக்கு முன் நடத்தியது. தமிழ்த்







தேசிய மக்கள் முன்னணியைத் தவிர எனைய பெரும்பாலான கட்சிகள் அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தன.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவை தமிழ் மக்கள் பேரவை கையில் எடுத்தது. அது வெற்றி பெறவில்லை. இப்பொழுது குத்து விளக்குக் கூட்டணி, புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர், டான் டிவியின் சிவில் சமூகம் போன்றன அதைக் கையில் எடுத்திருக்கின்றனவா? இந்த விடையத்தில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் மக்கள் பேரவை ஏன் வெற்றி பெறவில்லை என்ற கேள்விக்கு விடை முக்கியம். அன்றைக்கு அந்த முயற்சிக்கு சம்பந்தர் ஆதரவாக இருக்கவில்லை. தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக் கணிக்கும் முடிவை எடுத்தது. ஆனால் ஏனைய கட்சிகள் தயக்கத்தோடு தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க முன் வந்தன. அவ்வாறு ஆதரித்த கட்சிகளை ஒன்று திரட்டி அதை ஒரு அரசியல் செய்முறையாக பரிசோதிப்பதற்கு பேரவையால் முடியவில்லை. அதற்குத் தேவையான பலமும் கட்டமைப்பும் தமிழ் மக்கள் பேரவையிடம் இருக்கவில்லை.

இப்பொழுதும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தத் தேவையான பலம், அது பற்றி உரையாடுபவர்களிடம் உண்டா? இது ஏறக்குறைய கட்சிகளை ஒன்று திரட்டும் முயற்சியின் மறு வடிவம் தான். அதை இன்னும் தெளிவாகச் சொன்னால், ஜனாதிபதி தேர்தல் என்ற ஓர் அரசியல் நிகழ்வை முன் வைத்து தமிழ் ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவது தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவது தான். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக அதைச் செய்யத் தான் தமிழ் பரப்பில் ஆட்கள் இல்லையே? தமிழ்க் கட்சி களை ஒன்றாக்குவதற்கு ஏதாவது ஒரு பலம் இருக்க வேண்டும். கட்சிகளைக் கூப்பிட்டுக் கருத்தரங்கை வைக்கலாம். ஆனால் கட்சிகளை ஒன்று திரட்டி இதைச் செய்யுங்கள் என்று நெறிப்படுத்த ஒரு பலமான அரசியல் கட்டமைப்பு வேண்டும். அது தமிழ் மக்களிடம் உண்டா? இல்லையென்றால் தமிழ் ஐக்கியத்தைப் போலவே தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவும் நெருக்கடிக்கு உள்ளாகும். உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் ஆதரவளிக்கா விட்டால் அது வெற்றி பெறாது என்ற கருத்து குத்துவிளக்கில் உள்ள சில கட்சிக்காரர்களிடம் உண்டு. இதில் தன்னம்பிக்கை குறைவும் தாழ்வுச் சிக்கலும் உண்டு என்பதை முதலில் ஒப்புக் கொள்ள வேண்டும். தன் சொந்தப் பலத்தில் சொந்த உழைப்பில் தான் சரி யென்று கருதும் ஒன்றை வெற்றி பெறச் செய்வதற்கான திடசித்தம் குத்து விளக்குக் கூட்டுக்குள் எத்தனை கட்சிகளிடம் உண்டு? தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் முடிவெடுக்க முடியாதபடி இரண்டாக நிற்கின்றது. அது நீதிமன்றத்தில் இருந்து வீட்டுக்குத் திரும்பும் வரையிலும் இந்த நிலைமை தொடரும். இவ்வாறு அக்கட்சி இரண்டாகி நிற்பது தென்னிலங்கை வேட்பாளர்களுக்குச் சாதகமானது.

ஒரு பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற விடயத்தை தமிழ் மக்கள் உருப்படியாகச் செய்து முடிப்பார்கள் என்று தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு வேட்பாளரும் நம்பவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்கள் பேரவையின் சுயாதீனக் குழுவோடு உரையாட சஜித் பிரேமதாச முயற்சித்தார். அவருடைய மனைவி ஜெட் விங் ஹோட்டலில் தங்கியிருந்து அதற்கான அழைப்பையும் எடுத்தார். இம்முறை சஜித் அந்த விடயத்தைப் பொருட்படுத்தவில்லை என்று தெரிகிறது. சுமந்திரனும் சாணக்கியனும் தனக்குச் சாதகமாக தமிழ் வாக்குகளைத் திரட்டுவார்கள் என்று அவர் நம்புகிறார் போலும். மனோ கணேசன்., ரவூப் ஹக்கிம் போன்றவர்கள் தமிழ் வாக்குகளையும் முஸ்லிம் வாக்குகளையும் தன்னை நோக்கிச் சாய்க்கலாம் என்றும் அவர் நம்புவதாகத் தெரிகிறது. அதனால், தமிழ்ப் பொது வேட்பாளரைக் குறித்து அவர் அலட்டிக் கொள்ளவில்லை.

அப்படித் தான் ரணிலும் ஜேவிபியும். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் சிங்கள வேட்பாளர்களுக்குப் பதட்டத்தை ஏற்படுத்தும் ஒரு வளர்ச்சிக்கு இன்னும் வரவில்லை. அதை நோக்கி தமிழ்க் கட்சிகள் கட்டமைப்பாக ஒன்றிணையவில்லை. அவ்வாறு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்தாலும், சிங்கள வேட்பாளர்களுடன் பேரம் பேசுவது என்ற தெரிவை முதன்மைப்படுத்துவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன் வைக்கும் குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்துவதாக அமையலாம்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரின் கோரிக்கைகள் தொடர்பாக குத்துவிளக்குக் கூட்டணியோ அல்லது சிவில் சமூகமோ இறுதி முடிவு எதையும் எடுக்கவில்லை என்று தெரிகிறது. தமிழ்ப் பொது வேட்பாளரின் கோரிக்கைகள் சிங்கள வேட்பாளர்களுடன் பேரம் பேசக் கூடியவைகளாக அமைய வேண்டும் என்று குத்து விளக்குக் கூட்டணிக்குள் உள்ள சில கட்சிகள் கருதுவதாகத் தெரிகின்றது. அவ்வாறு சிங்கள வேட்பாளர்களை நோக்கித் தமிழ்ப் பொது வேட்பாளரின் கோரிக்கைகளை வளைப்பது என்பது, 13ஐ அமல்படுத்துவது வரையிலும் போக முடியும். ஆனால், தமிழ் மக்களின் கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர் களை நோக்கி வளைப்பதற்கு ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் தேவையில்லை. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்குத் தான் அது தேவை

தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு எனப்படுவது பேரம் பேசுலுக்கானது என்பது அதன் முதன்மை நோக்கம் அல்ல. முதன்மை நோக்கம் எதுவென்றால் தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவதும் தமிழ் மக்களின் ஐக்கியத்தை உலகத்துக்குக் காட்டுவதும் தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளுக்குரிய ஆகப் பிந்திய மக்கள் ஆணையை பெறுவதும் தான்.

தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுவது தமிழ் ஐக்கியத்தின் குறியீடு. தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்பும் ஒரு தெரிவு. தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளை முன் வைத்து ஜனாதிபதித் தேர்தலை ஒரு மறைமுக பொதுசன வாக்கெடுப்பாகப் பயன்படுத்தும் ஒரு தெரிவு. தேர்தல் முடிவை தமிழ் மக்களின் ஆகப் பிந்திய மக்கள் ஆணையாக உலகத்துக்கு காட்டப்படலாம்.


மாறாக பேரம் பேசுவதை அடிப்படையாக வைத்து சிந்தித்தால் அது தமிழ் மக்களின் கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர்களை நோக்கி வளைப்பதில் தான் போய் முடியும். மேலும் பொது வேட்பாளர் உச்சமான கோரிக்கைகளை முன்வைத்தால் பேரம் பேசுலுக்கான வாய்ப்புக் குறைந்து விடும். எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் அவரோடு பேரம் பேசி தனக்குரிய சிங்கள பௌத்த வாக்குகளை இழக்கத் தயாராக இருக்க மாட்டார்.

அதே சமயம் தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளை முன் வைத்து மக்கள் ஆணையைப் பெறுவதற்குரிய மறைமுக வாக்கெடுப்பாக ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தி அதில் தோல்வி கண்டால் அது தமிழ் மக்கள் ஒரு தேசமாக இல்லை என்பதை வெளியுலகத்திற்கு நிரூபித்து விடும் ஆபத்தும் உண்டு.

எனவே ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவது என்று முடிவு எடுத்தால் அதற்காகக் கூட்டாக உழைக்க வேண்டும். அர்ப்பணிக்க வேண்டும். அது ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை வெற்றி பெறச் செய்வதற்கான உழைப்பு என்பதைவிட, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான உழைப்பு என்பதே சரி.

# சீனாவின் மற்றொரு வியூகம்

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



சீனாவின் சோங்ஷிங் (ஊாழபெபபனைபெ) மாகாணத்துடன் இலங்கை அரசாங்கம் முக்கியமானதொரு உடன்பாட்டைச் செய்து கொள்ளவிருக்கிறது. சீனாவில், மத்திய மக்கள் அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் உள்ள நான்கு மாநகராட்சிகளில் சோங்ஷிங்கும் ஒன்று. பீஜிங், ஷங்காய், தியான்ஜின் ஆகியன மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் உள்ள ஏனைய மூன்று மாநகராட்சிகளாகும்.

சீனாவில் முக்கியமான இந்த சோங்ஷிங் மாகாணத்தில், 26 மாவட்டங்களும், 8 கவுண்டிகளும், 4 தன்னாட்சி கவுண்டிகளும் இருக்கின்றன. 22.8 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட இந்த மாகாணத்தில், தனிநபர் வருமானம், 13,479 டொலர்களாக உள்ளது. இலங்கையில் தனிநபர் வருமானம், 2022ஆம் ஆண்டு 3,347 டொலர்களாகும். சோங்ஷிங் மாகாணத்தில் உள்ள 26 மாவட்டங்களுக்கும், இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களுக்கும் இடையிலேயே சகோதர உடன்பாடு கைச்சாத்திடப்படவுள்ளது.

கடந்த ஆண்டு பிரதமர் தினேஷ் குணவர்த்தன சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, இந்த உடன்பாட்டுக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது. வடக்கு, கிழக்கை உள்ளடக்கியதாக, இந்த சகோதர மாவட்ட உடன்பாடு உடனடியாக கையெழுத்திடப்பட்டால், அது குழப்பங்களை உருவாக்கும். அதனால் இந்த விடயத்தில் அரசாங்கம் மெதுவாகவே காய்களை நகர்த்துகிறது. அப்போது, களுத்துறை மாவட்டத்துடன் மாத்திரம், சகோதர மாவட்ட மாதிரி உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. இதற்கமைய, சோங்ஷிங் மாகாணத்தில் இருந்து முதலீடு களையும், தொழிற் பயிற்சிகளையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கையில் விவசாயம், மீன்பிடி, கிராமிய மட்டத்தில் சிறிய, நடுத்தர கைத்தொழில்கள் போன்றவற்றில், முதலீடுகளைச் செய்வதற்கு சீனா ஆர்வம் கொண்டிருப்பதாக, சமூக வலுவுட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபபஸ்குவால் தெரிவித்திருக்கிறார். அவரே, இலங்கையின் 25 மாவட்டங்களுடன், சோங்ஷிங் மாகாணத்திலுள்ள மாவட்டங்களுடன் சகோதர உடன்பாடு செய்யப்படவுள்ளது பற்றிய தகவலை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஏற்கனவே களுத்துறை மாவட்டத்துடன் இந்த உடன் பாடு செய்து கொள்ளப்பட்டுள்ள நிலையில், ஏனைய 24 மாவட்டங்களுடன் விரைவில், உடன்பாடு கையெழுத்திடப்படும் என்றும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின், சீனப் பயணத்தின் போது இது தொடர்பான பேச்சு நடத்தப்படும் என்றும், அவர் கூறியிருந்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன கடந்த வாரம் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, கடந்த 26ஆம் திகதி, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 9 புரிந்துணர்வு உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன.

எனினும், கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடுகள் என்னென்ன என்பது பற்றிய தகவல்கள் ஏதும் அரசாங் கத்தினால் வெளியிடப்படவில்லை. சகோதர மாவட்ட உடன்பாடு இதனுள் அடங்கியிருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், அவசரப்பட்டு அரசாங்கத்தினால் இந்த உடன்பாட்டைச் செய்து கொள்ள முடியாது. இந்த உடன்பாடு, வடக்கு, கிழக்கு தவிர வேறு மாவட்டங்களுடன் செய்து கொள்ளப்படுவதில் சர்ச்சைகள் இருக்காது. ஆனால் வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களுடன் இந்த உடன்பாட்டைச் செய்து கொள்ள முனையும் போது தான் சர்ச்சைகள் ஏற்படும்.

ஏனென்றால் வடக்கு, கிழக்கில் சீனா இவ்வாறான உடன்பாட்டைச் செய்து கொள்வதை இந்தியா நிச்சயமாக எதிர்க்கும். வெளிப்படையாக இல்லாவிட்டாலும், இராஜதந்திர ரீதியாக அதற்கு அழுத்தங்களைக் கொடுக்கும். வடக்கு, கிழக்கில் சீனாவின் முதலீடுகளும், உடன்பாடுகளும், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற கருத்து புதுடில்லியிடம் உள்ளது. ஏற்கனவே வடக்கில் சீனாவின் பல முதலீடுகளை இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி தடுத்தது என்பது நினைவிருக்கலாம். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் கடலட்டை பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளதையே, இந்தியா, சீனாவின் அச்சுறுத்தலாக பார்க்கிறது.



இவ்வாறான நிலையில், முதலீடு என்ற பெயரில் அல்லது சகோதர மாவட்ட உடன்பாடு என்ற பெயரில், வடக்கு கிழக்கினுள் பிரவேசிப்பதை இந்தியா நிச்சயம் விரும்பாது. ஆனாலும், இந்த திட்டம் தொடர்பாக அமைச்சர் அனுபபஸ்குவால் அறிவித்து பல நாட்களாகியும், ஊடகங்கள் இதற்கு பெரியளவில் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

சகோதர மாவட்ட உடன்பாடு செய்து கொள்ளப்படும் போது, சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கிடையில் நேரடித் தொடர்புகள் ஏற்படுத்தப்படும். அவ்வாறான தொடர்புகள், சீனாவின் நலன்களை மையப்படுத்தியதாகவே இருக்கும். இலங்கையில் தனது நலன்களை கொண்டிராத நாடு ஒன்றுடன் இவ்வாறான உடன்பாடு செய்து கொள்வது வேறு ஆனால், இலங்கையில் தனக்கென பூகோள அரசியல் நலன்களைக் கொண்டிருக்கின்றது சீனா.

அதுவும் தமது போட்டி நாடாக கருதுகின்ற இந்தியாவுடன் மல்லுக் கட்டிக் கொண்டிருக்கும் சீனா, இலங்கையை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும் முயன்று வருகிறது. சீனாவின் விவசாயப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் இவ்வாறான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றை கடந்த 2022ஆம் ஆண்டு செய்து கொள்ள முற்பட்டது. அதற்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அத்துடன் உடன்பாடு கைச்சாத்திடுவதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா அந்த உடன்பாட்டில் கையெழுத்திட மறுத்து விட்டார். இது சீனாவுக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

இலங்கையில், குறிப்பாக வடக்கு, கிழக்கில் சீனா எல்லா மட்டங்களிலும் தனது செல்வாக்கை, விரிவுபடுத்திக் கொள்வதற்கு தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறது. இவ்வாறான நிலையில் சீனாவின்சோங்ஷிங் மாகாணத்துடன், சகோதர மாவட்ட உடன்பாடு செய்து கொள்ளப்படுமானால், அது வடக்கு கிழக்கு சீனாவுக்காக திறந்து விடப்பட்ட இடமாக மாறிவிடும். வடக்கு மாகாண சபை இருந்த போது, சீனாவின் இத்தகைய முதலீடுகள், தலையீடுகளை கடுமையாக எதிர்த்தது. ஆனால், இப்போது வடக்கு மாகாண சபை இல்லை. எனவே, எந்த உள் எதிர்ப்பும் உருவாக வாய்ப்பில்லை. நாட்டில் அதை விட மாவட்ட நிர்வாகங்கள் இலங்கை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பவை. எனவே மத்திய அரசாங்கமே இந்த விவகாரத்தை நேரடியாக கையாளும். அதனால் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் கையெழுத்திட மறுத்ததால் சீன பல்கலைக் கழகத்துடனான உடன்பாடு கைவிடப்பட்டது போல, இந்த உடன்பாடு கையெழுத்திடப்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

அதேவேளை இத்தகைய உடன்பாடு கையெழுத்திடப்பட்டு, அது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தினால் அதற்கு இந்தியாவே பொறுப்பேற்க வேண்டி வரும். ஏனென்றால், தமிழர்களுக்கு உரிய அதிகாரப் பகிர்வை இந்தியா பெற்றுக் கொடுத்திருந்தால், இவ்வாறான அச்சுறுத்தல் அதற்கு ஏற்பட்டிருக்காது. இந்தியாவில், மாவட்ட நிர்வாகங்கள், மாநில அரசின் கீழேயே இருக்கின்றன. இயங்குகின்றன. அவ்வாறான நிலையில், பாதகமான திட்டங்களை தடுக்கவும் முடிகிறது. சாதகமான திட்டங்களை சுயமாக செயற்படுத்தவும் முடிகிறது. ஆனால் இலங்கையில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட போது, மாவட்ட நிர்வாகங்கள், மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டது. அப்போது இந்தியா இதனை ஆட்சேபிக்கவில்லை. அத்துடன், தமிழர்களுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வை உறுதி செய்யவும் இல்லை.

இந்திய இலங்கை ஒப்பந்தம் ஊடாக தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட்டு விட்டதாக கூறுகின்ற இந்தியா, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கோ கடந்த 5 ஆண்டுகளாக செயலிழந்து கிடக்கும் மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கோ அழுத்தம் கொடுக்கவில்லை. இந்தியாவுக்கு எப்போதும் தமிழர்களே பாதுகாப்பாக இருக்க முடியும். அதனை இந்தியா சரியாக உணர்ந்து கொண்டிருந்தால், தமிழர்களை பலப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்திருக்கும். அதனை செய்யத் தவறியதால் தான், சீனாவிடம் இருந்து, இது போன்ற அச்சுறுத்தல்களை இந்தியா எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது



# சாணக்கியற்ற ஈழத்தமிழர் அரசியல்

சில தினங்களுக்கு முன்னர் ரெலோவின் 11 ஆவது தேசிய மாநாடு இடம் பெற்றது. அதில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானும் விருந்தினராக கலந்து கொண்டிருந்தார். இந்த நிகழ்வில் பேசிய தொண்டமான் குறிப்பிட்ட விடயமொன்று கவனத்தில் கொள்ளத் தக்கது.

அதாவது, போராட்டங்கள் உச்சத்தில் இருக்கின்ற போது நாங்கள் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று தொண்டர்கள் கேட்பார்கள். அதற்கு எங்களின் ஐயா சௌமியமூர்த்தி தொண்டமான் கூறுவார், நாங்கள் தோசை சுடுகின்றோம். தோசைக்கல் எங்களுடையது தான், அடுப்பும் எங்களுடையது தான், அடுப்பை எரிக்க பயன்படும் நெருப்பும் எங்களுடையது தான், (எரிவாயு) வீடும் எங்களுடையது தான். அதற்காக எங்களுடைய வேலைகளை எல்லாம் பார்த்து விட்டு ஆறுதலாக வந்து தோசையை பார்த்தால் தோசை இருக்குமா?

அப்படித் தான் போராட்டங்களும். போராட்டத்தில் உச்சத்தில் இருக்கின்ற போதே சிலதை விட்டுக் கொடுத்து எடுக்கக் கூடியவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாது விட்டால் நாம் விடயங்களை சாதிக்க முடியாமல் போகும். ஏனெனில் போராட்டத்தின் வேகம் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது. தங்கள் ஐயா தங்களுக்கு கற்றுத்தந்த சாணக்கியத்தினால் தான், நாங்கள் இன்று இந்த நிலையில் இருக்கின்றோம் என்று தொண்டமான் கூறுகின்ற போது எங்களுடைய மூத்த தலைவர்கள் என்போர் எங்களுக்கு எவ்வாறான சாணக்கியத்தை கற்றுத் தந்திருக்கின்றனர் என்னும் கேள்வியே எனக்குள் எழுந்தது.

எங்கள் ஐயாக்களும் எங்கள் அண்ணன்களும் தங்களின் அடுத்த தலைமுறைக்கு எவ்வாறான சாணக்கியத்தை கற்றுத் தந்து விட்டுச் சென்றிருக்கின்றனர்? வரலாறு முழுவதும் முன்னோடிகள் விட்டுச் செல்கின்ற வழித்தடங்களிலிருந்து தான் அடுத்த தலைமுறை தனக்கான எதிர்காலத்தை ஆக்கிக் கொள்கின்றது.

ஆனால் தமிழ் மக்களின் நிலையோ சாண் ஏற முழம் சறுக்கும் கதையாகவே தொடர்கின்றது. இதற்கு என்ன காரணம்? ஒரு வலுவான அரசியல் அடித்தளத்தை தமிழர்களின் மூத்த தலைமுறை விட்டுச் செல்லவில்லை. இன்று தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலமோ, பிச்சை வேண்டாம் ஐயா நாயை பிடியுங்கள் என்னும் நிலைமையை வந்தடைந்திருக்கின்றது. இதற்காக, நாம் எவரையாவது குற்றம் சாட்ட வேண்டும் என்றால் நமது மூத்த தலைமுறை முழுவதையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதைத் தவிர வேறு வழியிருக்காது. இராஜதந்திரம் பற்றி அன்ரன் பாலசிங்கத்தின் ஒரு கூற்றை கவிஞர் புதுவை இரத்தினதுரை கூறியது நினைவுண்டு.

அதாவது, இராஜதந்திரம் என்பது தொடங்கிய இடத்திற்கே திரும்பிச் செல்வதல்ல என்பாராம். ஆனால் இன்று தமிழரின் அரசியல் நிலையோ தொடங்கிய இடத்தில் கூட ஆரம்பிக்க முடியாத நிலையில் அல்லவா இருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், இராஜதந்திரத்தின் அரிச்சுவடியைக் கூட தமிழ் அரசியல் சமூகம் அறியவில்லை என்னும் முடிவுக்கல்லவா நாம் வரவேண்டியிருக்கின்றது. நான் முன்னர் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்ட விடயத்தை இந்த இடத்தில் நினைவு கொள்வது பொருத்தமென்று எண்ணுகின்றேன்.

அதாவது, போராட்டங்கள் பிழையில்லை, ஆனால் நாங்கள் ஆரம்பிக்கும் போராட்டங்களை எப்போது முடிக்க வேண்டுமென்றும் எங்களுக்குத் தெரிய வேண்டும். அவ்வாறில்லாது நாங்கள் ஆரம்பித்த போராட்டத்தை இன்னொருவர் முடிப்பாரானால்



அப்போது எங்களுக்கு சர்வ நாசமே மிஞ்சும். இந்த பின்புலத்தில் நோக்கினால் நமது போராட்டத்தை திருப்பிப் பார்த்தால் நமது கையறு நிலையை இலகுவாக புரிந்துகொள்ள முடியும். ஆனால் இவ்வாறான அனுபலங்களுக்குப் பின்னர் கூட நாங்கள் அரசியல் யதார்த்தங்களை புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருப்பது தான் சிக்கலானது. நாங்கள் உயர்த்திப் பிடிக்கும் சுலோகங்கள் மூலம் மக்களை எந்தத் திசை நோக்கி கொண்டு செல்ல முயற்சிக்கின்றோம்? இந்தக் கேள்விக்கான பதில் இல்லாமலேயே நாம் அரசியலை முன்னெடுத்து வருகின்றோம். கப்பல்கள் வருகின்றன, வெளிநாடு செல்ல விரும்புவோர். அனைவரும் ஏறலாம் என்றால் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எவருமே இருக்க மாட்டார்கள். இதுதான் இன்றைய நிலைமை. மக்களுக்கு நம்பிக்கையை வழங்க முடியாத அரசியல் தலைமைகள், வெறும் சுலோகங்களை உயர்த்துவதில் என்ன பொருளுண்டு?

ஒரு சிறிய இனத்தால் ஆயுதப் போராட்டத்தில் அதிக காலத்தை செலவிட முடியாதென்று அன்றைய சூழலிலேயே அரசறிவியல்அறிஞர் மு.திருநாவுக்கரசு போன்றவர்கள் கூறியிருக்கின்றனர். எனது தேடலில் உண்மையில் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தோடு ஆயுதப் போராட்டம் முடிவுற்று விட்டது. இந்த உண்மையை விளங்கிக் கொள்வதற்காக நாங்கள் கொடுத்த விலையோ கணக்கிலடங்காது.

உண்மையில் அன்றே இந்த உண்மையை விளங்கிக் கொண்டிருந்தால் நாங்கள் முள்ளிவாய்க்காலை சந்தித்திருக்கவேண்டி வந்திருக்காது. இது ஒரு வராலாற்றுப் படிப்பினை. அமெரிக்க தத்துவஞானியான ஜோர்ஜ் சந்தயாணாவின் ஒரு கூற்றுண்டு. அதாவது, வரலாற்றின் தவறுகளை மறப்போர் அந்தத் தவறுகளை மீளவும் செய்ய சபிக்கப்பட்ட வர்களாவர். இது க.வே.பாலகுமாரனின் மொழிபெயர்ப்பு. விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தராக அறியப்பட்ட க.வே.பாலகுமாரன் தனது கட்டுரையொன்றில் இந்தக்கூற்றை பயன்படுத்தியிருப்பார். ஆனால் அவர் இந்தக் கூற்றை சிங்களவர்களை நோக்கியே பயன்படுத்தியிருப்பார். சிங்களவர்கள் வரலாற்றிலிருந்து எதனையும் கற்றுக் கொள்ளவில்லை என்னும் தனது பார்வையை நிறுவுவதற்காகவே அவர் இந்தக் கூற்றை பயன்படுத்தியிருப்பார். ஆனால் இந்தக் கூற்று இப்போது யாருக்கு பொருத்தமானது என்பதை வரலாறு நிரூபித்து விட்டதல்லவா. இறுதி யுத்தத்தின் போதான நிலைமைகளை 'பாவத்தின் சம்பளம்' என்று பாலகுமாரன் வர்ணித்த கதையுமுண்டு. ஒரு வேளை, அவர் உண்மைகளை உணர முற்பட்டிருக்கலாம். இதே போன்று தான் அனைத்து விடயங்களையும் நியாயப்படுத்திக் கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கம், அனைத்தும் கை மீறிப் போய் விட்டது என்பதை உணர்ந்தே இந்தியாவை நோக்கிச் சென்றார். இந்திய படைகளுடன் விடுதலைப்புலிகள் மோதியமை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ராஜீவ் காந்தி படுகொலை ஆகியவற்றுக்காக இந்திய அரசாங்கத்திடமும் இந்திய மக்களிடம் வருத்தம் தெரிவித்ததுடன், கடந்த காலத்தை பின்னுக்கு வைத்து பெருந்தன்மையுடன் தலையீடு செய்ய வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் இன்றோ இவற்றிலிருந்து எதனையுமே கற்றுக் கொள்ளாத ஒரு குழுவினரோ, தொடர்ந்தும் அரசியல் விடலைகளாகவே தங்களை காண்பித்துக் கொள்கின்றனர்.

ஒருவேளை அவர்கள் உண்மையிலேயே விடலைகளாகவே இருக்கலாம். அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை அவர்கள் அறியாமலும் இருக்கலாம். ஆனால் அவர்களை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பிலிருக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுமல்லவா அனைத்துக்கும் பின்னால் இழுபட்டுச் செல்பவர்களாக இருக்கின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற சாந்தனுக்கான அஞ்சலி நிகழ்வும் அதன் போது வெளிப் படுத்தப்பட்ட கருத்துகளும் இதற்கு சிறந்த உதாரணமாகும். நாங்கள் எந்தளவிற்கு வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள முடியாத இனமாக இருக்கின்றோம் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

கடந்த 14 வருடங்கள் என்னவெல்லாம் பேசப்பட்டது. சற்று அனைத்தையும் திருப்பிப் பாருங்கள். சர்வதேச அழுத்தங்கள் இலங்கையின் குரல்வளையை நெருக்கப் போகின்றது, இனி அவர்கள் தப்ப முடியாது என்றெல்லாம் பேசப்பட்டது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு சென்று வந்த பின்னர். அமெரிக்கா விரைவில் கடுமையான நடவடிக்கை ஒன்றை எடுக்கவுள்ளது என்றவாறு கதைகள் புனையப்பட்டன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலும் சர்வதேச நீதிமன்றம் தொடர்பிலும் ஏராளமாக பேசப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையருக்கு கடிதம் எழுதுவது தொடர்பில் சண்டைகள் இடம் பெற்றன. எதனை எவ்வாறு உள்ளடக்குவது என்று தங்களுக்கும் மோதிக் கொண்டன கட்சிகள். மக்களோ, அனைத்தையும் சாதாரணமாக கடந்து சென்று கொண்டிருந்தனர். ஆனால் என்ன நடந்தது? சொல்லிக்கொள்ளுமன விற்குஏதாவது நடந்ததா? ஆனால் 14 வருடங்கள் பென்றுவிட்டன.

2012 இல் அமெரிக்க அனுசரணையில்

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



இலங்கையின் மீதான பிரேரணை கொண்டு வரப்பட்டது. இந்தக் காலத்தில் இந்தியா என்றொரு பிராந்திய சக்தி இருப்பதையே சம்பந்தனும் அவரது தலைமையில் இயங்கிய கூட்டமைப்பும் மறந்திருந்தது. ஆனால் ரெலோவின் முயற்சியில் 2022 இல் இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது.

சுமந்திரன் அதற்கு எதிரான கருத்துகளையே பொது வெளிகளில் முன்வைத்தார். அவருக்கு அந்த முயற்சியில் ஆர்வமில்லை என்றே தெரிந்தது. முயற்சியில் ஆர்வமில்லையா அல்வது இந்தியாவை நோக்கி மீண்டும் செல்வதை அவர் விரும்பவில்லையா? ஒரு வேளை மேற்குலக அழுத்தங்கள் தொடர்பில் அதிகம் பேசியதால், தனது தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாமலும் இருந்திருக்கலாம். பல்வேறு இழுபறிகளுக்குப் பின்னர் 6 கட்சிகளின் தலைவர்களது கையெழுத்துடன் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டது.

உண்மையில் 10 வருட கால, மேற்குலகம் நோக்கிய தமிழர் அரசியல் நகர்வுகளின் தோல்வி தான், இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டுமென்னும் நிலை மையை உருவாக்கியது. 2006இல் பாலசிங்கம் எவ்வாறு வேறு வழிகள் எதுவுமின்றி இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டுமென்று சரியாக சிந்தித்தாரோ, அவ்வாறு தான் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் சிந்தித்தன. ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அதற்கு தலைமை தாங்கியிருந்தார்.

இந்தியா இல்லாமல் முன்னெடுக்கப் பட்ட எந்தவொரு நகர்விலும் இது வரையில் தமிழர்களால் ஒரு படி கூட முன்னோக்கி நகர முடியவில்லை. இது தான் நமது இது வரையான அரசியல் வரலாறு சொல்லும் உண்மை.

இந்த உண்மையை புறம் தள்ளிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாம் பின்நோக்கியே பென்றிருக்கின்றோம். இனியும் இந்த உண் மையை புரிந்து கொள்ளாமல் செயற்பட்டால் தொடர்ந்தும் இப்படியே ஆதங்கப்பட்டுக் கொண்டு, அவ்வப்போது சில எதிர்ப்புகளை காண்பித்துக் கொண்டு எங்களின் நாட்களை செலவிட்டுக் கொள்வதாகவே எங்கள் அரசியல் மிஞ்சும். காலப்போக்கில் தமிழ்த் தேசிய அரசியல் என்பது வெறுமனே யாழ். குடாநாட்டு அரசியலாகவே கருங்கிப் போகும்.

# இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு பதவி விலக நெருக்கடி ஆயிரக்கணக்கானோர் திடீர் போராட்டம்!


கடந்த வருடம் அக்டோபர் 7-ஆம் தேதி ஹமாஸ் ஆயுதக்குழு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து அதிர்ச்சியும், அதனால் தேசிய ஒற்றுமையும் ஏற்பட்டதால், இந்த அரசியல் பிளவுகள் கொஞ்சம் கிடப்பில் போடப்பட்டன. ஆனால் ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஆயிரக்கணக்கான அரசியல் எதிர்ப்பாளர்கள் மீண்டும் இஸ்ரேலின் தெருக்களில் போராடத் துவங்கியுள்ளனர்.

இஸ்ரேல் காஸா மீது போர் நடத்தி வருகிறது. இந்தப் பின்னணியில் நீண்டகாலமாக இஸ்ரேல் பிரதமராக இருந்துவரும் பெஞ்சமின் நெதன்யாகுவை பதவி விலகக்கோரி போராட்டக்காரர்கள் தங்கள் போராட்டத்தை முடுக்கியுள்ளனர்.

இஸ்ரேலின் ஜெருசலேம் நகரின் முக்கிய நெடுஞ்சாலையான பெகின் போலவார்ட் தெருவை மறித்த போராட்டக்காரர்களை அகற்ற போலீசார், துர்நாற்றம் கலந்த தண்ணீரைப் பீய்ச்சி அடித்தனர்.

நெதன்யாகுவை பதவி விலகவும், தேர்தல்களை முன்கூட்டியே நடத்தவும் கோரும் பழைய முழக்கங்களுடன், காஸாவில் இன்னும் பணயக்கைதிகளாக இருக்கும் 130 இஸ்ரேலியர்களை விடுவிப்பதற்கான உடனடி ஒப்பந்தத்தைக் கோரும் புதிய கோஷங்களையும் போராட்டக்காரர்கள் எழுப்பினர். இந்த 130 பேரில் ஒரு பகுதியினர் இறந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. ஹமாஸ் குழுவினரிடம் பணயக் கைதிகளாக இருக்கும் 130 பேரில் ஒரு பகுதியினர் இறந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. நடந்து வரும் போர் நீடித்தால், பணயக்கைதிகளில் மேலும் பலர் கொல்லப்படலாம் என அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் போராட்டக்காரர்கள் அச்சத்தில் இருக்கிறார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 31) மாலை, ஆயிரக்கணக்கானோர் இஸ்ரேலிய பாராளுமன்றத்தைச் சுற்றிலும் கூடி போராட்டம் நடத்தினர். அப்போது காஸாவில் போரில் ஈடுபட்டுவரும் இஸ்ரேலிய ராணுவ வீரரின் தாயான கட்டியா அமோர்சா என்ற பெண், பெஞ்சமின் நெதன்யாகு நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேற விமான டிக்கெட்டை தான் வாங்கித் தரத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.





அவரோடு, அவர் சொந்தமாகத் தேர்ந்தெடுத்து அமைச்சரவையில் வைத்திக்கும் அத்தனை மோசமானவர்களையும் உடன அழைத்துச் செல்லுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார் அவர்.

## நெதன்யாகுவின் ஆதரவாளர்கள் சொல்வது என்ன?

நெதன்யாகுவின் ஆதரவாளர்கள் போராட்டக்காரர்களின் கருத்தை எதிர்க்கிறார்கள். போராட்டம் நடந்துகொண்டிருந்த இடத்தில் ஒரு ராபி (யூத மதகுரு) காணப்பட்டார். அவர் பெயர் யெஹுஜீதா கிளிக். இசுலாமியரின் புனிதமான மசூதி என்று கருதப்படும் ஜெருசலேமில் உள்ள அல் அக்ஸா மசூதியின் இடத்தில் இருப்பதாகக் கருதப்படும் 'டெம்பிள் மவுண்ட்' என்ற இடத்தில் யூதர்கள் பிரார்த்தனை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்பவர் இவர். இஸ்ரேலில் உண்மையான எதிரி ஹமாஸ் தான், பிரதமர் நெதன்யாகு அல்ல என்பதை போராட்டக்காரர்கள் மறந்து விட்டதாக கிளிக் கூறுகிறார்.

நெதன்யாகு மிகவும் பிரபலமானவர் என்று நான் நினைக்கிறேன். அது தான் போராட்டக்காரர்களுக்கு ஆத்திரமூட்டுகிறது. இவ்வளவு காலமாக இவர்கள் போராட்டம் நடத்தியும், அவர் இன்னும் ஆட்சியில் இருப்பதை இந்தப் போராட்டக்காரர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று நான் நினைக்கிறேன்.'' என்றார்.

அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யட்டும். அவர்களது கருத்தை சத்தமாக தெளிவாக பேசட்டும். ஆனால் அவர்கள் ஜனநாயகத்திற்கும் அராஜகத்திற்கும் இடையே உள்ள மிக மெல்லிய இருக்கோட்டைக் கடக்காமல் கவனமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.' என்றார்.

## காஸா மீதான போரை நியாயப்படுத்தும் அமைச்சர்கள்

இஸ்ரேலின் இந்தப் போராட்டக்காரர்களும், இஸ்ரேலின் மற்ற நட்பு நாடுகளில் இருக்கும் நெதன்யாகுவின் எதிர்ப்பாளர்களும், நெதன்யாகுவின் அரசாங்கத்தில் தான் ஜனநாயகத்தின் எதிரிகள் இருப்பதாகக் கூறுகிறார்கள். நெதன்யாகுவின் அரசு தீவிர தேசியவாத யூதக் கட்சிகளின் ஆதரவைச் சார்ந்துள்ளது.

நெதன்யாகுவின் அமைச்சரவையில் இருக்கும் நிதியமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச் மதவாத சியோனிச கட்சியின் தலைவர். அதன் எம்.பி.க்களில் ஒருவரான ஒஹாட் தால், பணயக்கைதிகளை விடுவிக்க ஹமாஸ் மீதான ராணுவ அழுத்தத்தைத் தவிர வேறு வழி இல்லை என்று கூறியிருக்கிறார்.

'பணயக் கைதிகளை ஒப்பந்தத்தின் மூலம் எளிதாகத் விடுவித்து, பின்னர் அதற்கு ஈடாக இஸ்ரேல் விடுவிக்கும் அனைத்து பயங்கரவாதிகளையும் நாமே கொல்ல ஹமாஸ் அனுமதிக்கும் என்று நினைக்கிறீர்களா? அது அவ்வளவு எளிதல்ல.'' என்றார் அவர்.

ஒரே ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் அனைத்து பணயக்கைதிகளையும் விடுவித்து, எல்லாவற்றையும் சரி செய்ய முடியும் என்றால், ஒவ்வொரு இஸ்ரேலியரும் அந்த பொத்தானை அழுத்துவார்கள். ஆனால் நீங்கள் நினைப்பது போல் இது எளிதானது அல்ல.' என்றார்.

பெஞ்சமின் நெதன்யாகு, தான் மட்டுமே இஸ்ரேலை பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடியவர் என்று கூறி வந்தார். பல இஸ்ரேலியர்கள் அவரை நம்பினர்.

## பாதுகாப்புக் குறைபாட்டுக்குப் பொறுப்பு

பாலஸ்தீனர்கள் கோரும் அமைதி உடன்படிக்கைக்குப் படியாமல், அவர்கள் கோரிவரும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் யூதர்களைக் குடியமர்த்தலாம் என்றும், பாலஸ்தீனர்களைச் சமாளித்துக் கொள்ளலாம் என்றும் அவர் கூறி வந்தார். ஆனால் கடந்த ஆண்டு அக்டோபர் 7-ஆம் தேதி ஹமாஸ் ஆயுதக்குழு எல்லைக் தாண்டி வந்து இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்திய போது எல்லாம் மாறியது.

பல இஸ்ரேலியர்கள், இவ்வளவு பெரிய விளைவுகளுடன் கூடிய தாக்குதல் நடக்கக் காரணமாக இருந்த பாதுகாப்பு குறைபாடுகளுக்கு நெதன்யாகுவே பொறுப்பு என்கிறார்கள்.

ஹமாஸ் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலின் பாதுகாப்புத் தலைவர்களைப் தாம் தவறு செய்ததை ஒப்புக்கொண்டு அறிக்கைகளை வெளியிட்டனர். ஆனால் இதுவரை நெதன்யாகு அதுபோல எந்த பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவே ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களை ஆத்திரமூட்டுகிறது.

## வலதுசாரி ஆதரவு

கடந்த 40 வருடங்களாக பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேல் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார். அவர் பாலஸ்தீன அரசையும், பாலஸ்தீனத்தின் விடுதலையையும் தொடர்ந்து எதிர்த்து வருகிறார். போருக்குப் பிறகு காஸாவில் சுயாட்சி ஏற்படுத்தும் அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் திட்டங்களை அவர் கடுமையாக நிராகரித்ததால் தான் இஸ்ரேலின் தீவிர வலதுசாரிகளின் தொடர்ச்சியாக அவரை ஆதரிக்கிறார்கள்.

## நெதன்யாகு பலவீனமானவர் பொய் சொல்பவர்

இஸ்ரேல் பாராளுமன்றத்தில் போராட்டம் நடத்தியவர்களில் ஒருவர், இஸ்ரேலிய இராணுவத்தின் ஓய்வுபெற்ற பிரிகேடியர் ஜெனரலாக இருந்த டேவிட் அக்மோன். நெதன்யாகு முதன்முதலில் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, அக்மோன் பிரதமர் அலுவலகத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று நடத்தினார்.

'1948-ஆம் ஆண்டுக்குப் பிறகு, இது தான் இஸ்ரேலின் மிகப்பெரிய நெருக்கடி. 1996-இல் நான் நெதன்யாகுவின் முதல் தலைமைத் தளபதியாக இருந்தேன். அதனால் எனக்கு அவரை நன்றாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. மூன்றே மாதங்களில் நான் எனது பணியை ராஜினாமா செய்தேன். ஏனென்றால் நெதன்யாகு யார் என்பதை நான் உணர்ந்தி கொண்டேன். அவர் இஸ்ரேலுக்கு மிகப்பெரிய ஆபத்து என்றார்.

மேலும், 'அவருக்கு முடிவெடுக்கத் தெரியாது. அவர் பயப்படுகிறார். அவருக்குத் தெரிந்தது பேசுவது மட்டுமே. அவர் தன் மனைவியைச் சார்ந்திருப்பதை நான் பார்த்தேன். அவரது பொய்களைப் பார்த்தேன். மூன்று மாதங்களுக்குப் பிறகு நான் அவரிடம் 'உங்களுக்கு உதவியாளர்கள் தேவையில்லை. உங்கள் இடத்திற்கு வேறு ஒரு பிரதமர் தான் தேவை' என்று சொல்லிவிட்டு நான் கிளம்பி வந்து விட்டேன்.' என்றார்.

## நெதன்யாகுவின் அரசியல் வாழ்க்கைக்கு சிக்கலா?

தனக்கு எதிராகப் போராட்டம் நடந்து கொண்டிருக்கையிலேயே நெதன்யாகு தேர்தலை முன்கூட்டியே நடத்தும் யோசனையை நிராகரித்தார். மேலும் காஸாவின் ரஃபா பகுதியில் ஹமாஸ் படைகளுக்கு எதிராக ஒரு புதிய தாக்குதலை நடத்தப் போவதாக மீண்டும் உறுதி கூறினார்.

நெதன்யாகு ஒரு வலிமையான அரசியல் பிரசாரகர். அவரது எதிரிகள் கோருவதைப் போல முன்கூட்டியே தேர்தல் நடந்தாலும் அவர் வெல்லக்கூடும் என்று அவர்களது ஆதரவாளர்கள் நம்புகிறார்கள்.

ஹமாஸ் அழிக்கப்பட வேண்டும் என்பதில் இஸ்ரேலியர்களிடையே கருத்து வேறுபாடில்லை. அதற்கு பெரும் ஆதரவு உள்ளது. ஆனால் போர் நடத்தப்படும் விதம், பணயக்கைதிகளை மீட்பதில் இருக்கும் தாமதம் ஆகியவை பெஞ்சமின் நெதன்யாகுவின் அரசியல் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவரும் அளவுக்கு அவர் மீது பெரும் அழுத்தத்தைச் செலுத்தி வருகின்றன. நன்றி:- பிபிசி


எதிர்பாருங்கள்! காத்திருங்கள்! வாருங்கள்!
முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
நடாத்தும் 13வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் மைத்திரி கிளப்பிய சர்ச்சைகளும்

- நிலாந்தன் -



கோத்தாபய ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அது அவருடைய குடும்பத்துக்குள்ளேயே போதிய வரவேற்பைப் பெறவில்லை என்று தெரிகிறது. அவர் தன் நிலைப்பாட்டில் மாறவில்லை என்பதை அந்தப் புத்தகம் நிரூபிப்பதாக அதை வாசித்தவர்கள் கூறுகிறார்கள். அதை விட முக்கியமாக 2022 ஆம் ஆண்டில் தற்காப்பு நிலையில் காணப்பட்ட அவர் இப்பொழுது தன்னை நியாயப்படுத்தும் ஒரு வளர்ச்சிக்கு வந்து விட்டார் என்பது தான் அந்த நூலில் உள்ள செய்தி. அதாவது ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து வலிந்து தாக்கும் ஒரு நிலையை நோக்கி முன்னேறி வருகிறார்கள் என்று பொருள்.

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பஸில் தெரிவித்த கருத்துக்களும் அதைத்தான் அதாவது ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து வலிந்து தாக்கும் நிலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

அதே சமயம் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய மைத்திரிபால சிறிசேன ஈஸ்டர் குண்டு வெடிப்பைக் குறித்து புதிதாகத் தகவல்களை வெளியிடப் போவதாகக் கூறுகிறார்.

பசில் ராஜபக்ச நாடு திரும்பியதும் தெரிவித்த கருத்துக்களில் முக்கியமானது ஒரு பொதுத் தேர்தலை முதலில் வைக்க வேண்டும் என்பதாகும். ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தலை முதலில் வைத்தால் அதில் வெற்றி பெற்ற கட்சி அல்லது கூட்டு பொதுத் தேர்தலில் போட்டியிடும் பொழுது, இயல்பாகவே மக்கள் அதை நோக்கிப் போவார்கள். அந்தக் கூட்டின் வெற்றி என்பது ஒரு முற்கற்பிதமாக அமையும். அது மக்களை முன் முடிவுகளோடு வாக்களிக்கச் செய்யும்.

அதாவது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் அதற்குப் பின் நடக்கக்கூடிய தேர்தல்களில் வாக்காளர்களின் மனோநிலையின் மீது செல்வாக்கைச் செலுத்தலாம் என்று பொருள். எனவே மக்கள் இயல்பாக முன் முடிவுகள் இன்றி வாக்களிப்பதற்கு முதலில் பொதுத்தேர்தலில் வைக்க வேண்டும், பின்னர் ஜனாதிபதித் தேர்தலை வைக்கலாம் என்று பசில் கூறியுள்ளார். அதை மஹிந்தவும் ஆதரித்துள்ளார். அதாவது தாமரை மொட்டுக் கட்சி முதலில் பொதுத்தேர்தல் வைப்பதை வலியுறுத்துகின்றது.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பொதுத் தேர்தலை அவர்கள் முதலில் வைக்கவில்லையே? இப்பொழுது மட்டும் ஏன் மக்கள் முன் முடிவுகள் இன்றி சுயாதீனமாக, சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்?

ஏனென்றால் ஜனாதிபதி தேர்தலை வைத்தால் அதில் சில சமயம் ரணில் வெல்லக் கூடும். அத்தேர்தலில் அவர் ராஜபக்சக்களின் பொது வேட்பாளராக இறங்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு. ஆனாலும் அவர் பெறக்கூடிய வெற்றியானது பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மெல்ல மெல்ல மீட்டுக் கொண்டு வருவதற்கான ஒரு பரிசாகவே பார்க்கப்படும். அது இயல்பாகவே ரணிலின் பேரம் பேசும் பலத்தை அதிகப்படுத்தும். அவ்வாறு தனது பேர பலத்தை உறுதிப்படுத்திக் கொண்ட பின், ஒரு பொதுத் தேர்தலை அவர் வைப்பாராக இருந்தால், அப்பொழுது ராஜபக்சக்கள் ஒப்பிட்டுளவில் பலவீனமாக இருப்பார்கள். யாரைப் பிரதமராக நியமிக்க வேண்டும்? யார் யாரை அமைச்சர்களாக நியமிக்க வேண்டும்? போன்ற விடயங்களில் ரணிலின் கை பலமாக இருக்கும். சரி அப்படியென்றால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பொதுத் தேர்தலை வைத்தால் என்ன நடக்கும்? பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் சொந்தக் கட்சியை விடவும் ராஜபக்ஷர்களின் கட்சிக்கு அதிக வெற்றி வாய்ப்புகள் இருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். கிராமப்புறங்களில் யுத்த வெற்றிவாதம் இப்பொழுதும் சூடாகவே இருக்கிறது என்றும் அவர்கள் நம்புகிறார்கள். எனவே ராஜபக்சக்கள் பொதுத் தேர்தலில் யுஎன்பியை விட அதிக வாக்குகளை பெறுவார்களா இருந்தால், அவர்களுக்குப் பேர பலம் அதிகரிக்கும். அப்பொழுது அவர்கள் விரும்பிய அமைச்சைக் கேட்டுப் பெறலாம். நாமல் ராஜபக்சவை பிரதமராக நியமிக்க வேண்டும் என்ற நோக்கம் அவர்களிடம் இருப்பதாகத் தெரிகிறது. அதனால் தான் முதலில் பொதுத் தேர்தலை வைக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கின்றார்களா?

ஆனால் ராஜபக்சக்கள் ஒன்றை நினைக்க, மேற்கு நாடுகள் வேறு ஒன்றை நினைப்பதாகத் தெரிகிறது. ராஜபக்சக்கள் மீண்டும் பலமடைந்து அதாவது தற்காப்பு நிலையிலிருந்து தாக்கும் நிலைக்கு வருவதை, மேற்கு நாடுகள் விரும்பவில்லை என்று தெரிகிறது. அதனால்தான் மைத்திரிபால சிறிசேன ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்னணிகள் பற்றிப் பேசத் தொடங்கியுள்ளாரா?

அவர் கூறுவது உண்மையா பொய்யா? அவருக்கு பின் யார் இருக்கிறார்கள்? என்பதற்கெல்லாம் அப்பால்,ஈஸ்டர் குண்டு வெடிப்பைப் பற்றி ஞாபகப்படுத்துவது என்பது, அதுவும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருக்கையில் அதைச் செய்வது என்பது ராஜபக்சக்களுக்கு பாதகமானது.

சில சமயம் மைத்திரி கூறப்போகும் தகவல்கள் கிறீஸ்தவர்களைக் கோபமடையச் செய்யலாம். கர்தினால் மல்க்கம் ரஞ்சித் மீண்டும் ஒரு சுயாதீன விசாரணையைக் குறித்துக் கேட்கலாம். இவையெல்லாம் ராஜபக்சங்களுக்குப் பாதகமானவை.

அதாவது வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் முன்னுக்கு வர முடியாத ஒரு நிலைமையை அது தோற்றுவிக்கலாம். எனவே ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பாக வெளிப்படுத்தப்படக்கூடிய புதிய தகவல்கள் ராஜபக்ச குடும்பத்தை மீண்டும் தற்காப்பு நிலைக்கு தள்ளக் கூடியவைகளாக இருக்கக் கூடும். அவர்களை ஹை ப்ரோபைலில் இருந்து லோ ப்ரோபைல் நிலைக்கு மாற்றுவது அதன் நோக்கமாக இருக்கலாம். அதாவது ஜனாதிபதி தேர்தலில் ரணிலின் வழிகளை இலகுவாக்கிகி கொடுப்பது?

மேற்கு நாடுகள் ஆகட்டும், ஐநாவாகட்டும், பன்னாட்டு நாணய நிதியம் ஆகட்டும் அனைத்துமே ரணில் மீண்டும் ஜனாதிபதியாக வருவதைத் தான் விரும்புகின்றன. அவர்களுக்கு ரணிலை விட்டால் வேறு தெரியவில்லை. ஏன் ராஜபக்சங்களுக்கும் மகாசங்கத்துக்கும் கூட ரன்னிலை விட்டால் வேறு தெரிவில்லை. தேர்தலை முன்னிட்டு பன்னாட்டு நாணய நிதியம் அவரைப் பலப்படுத்த விளையும். அது மட்டுமல்ல, படித்த ஆங்கிலம் தெரிந்த மேல் தட்டு வர்க்கத்தின் மனதில் அவர் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மெல்ல மெல்ல மீட்டு வருகிறார் என்ற ஒரு கருத்து பலமடைந்து வருகிறது.

நாட்டுக்குள் வரும் உல்லாசப் பயணிகளின் தொகை முன்னுரை விட அதிகரித்து வருகின்றது. வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்கள் அனுப்பும் பணத்தின் தொகையும் அதிகரித்து வருகிறது. தவிர மின்சாரக் கட்டணத்தை அதிகரித்தமை, எரிபொருள் விலையை அதிகரித்தமை, வரியை அதிகரித்தமை போன்ற நகர்வுகளின் மூலம் அரசாங்கத்தின் வருமானம் பெருகி வருகிறது. இவை போன்ற பல காரணங்களினாலும் அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மெல்ல மெல்ல மீட்டு வருகிறது என்ற ஒரு கருத்து உயர் குழாத்தின் மத்தியில் உண்டு.

ஆனால் நடுத்தர வர்க்கம் கீழ் நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் அவ்வாறு இல்லை. அவர்களில் அநேகர் ஜேவிபிக்கு ஆதரவாகவே காணப்படுகின்றார்கள். இளம் பட்டதாரிகள் ஒரு மோட்டார் சைக்கிள் கூட வாங்க முடியாதுள்ளது என்று புலம்புகிறார்கள். ஒரு மோட்டார் சைக்கிள் 8 லட்சத்துக்கு மேல் போகின்றது. ஒரு மோட்டார் சைக்கிள் கூட வாங்க முடியாத ஒரு நாட்டை விட்டு அவர்கள் வெளியேறத் துடிக்கிறார்கள். அல்லது ஜேவிபியை ஆதரிக்கின்றார்கள். இப்படிப்பட்டதோர் பின்னணியில், முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தால், அதில் வாக்குகள் மூன்றாகப் பிரியும் நிலைமைகள் அதிகரிக்கின்றன.

ரணிலை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வர விரும்பும் மேற்கு நாடுகள், ராஜபக்சக்கள் அவருக்குத் தடையாக இருக்கக் கூடாது என்று நம்புகின்றன. இந்தியா இந்த விடயத்தில் என்ன நிலைப்பாட்டை எடுக்கும்?

ரணில் புத்திசாலி, தந்திரசாலி. எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்திருக்கக் கூடியவர். அப்படிப் பார்த்தால், இந்தியா அவரைக் கையாள்வது கடினம். ஆனால் இந்த விடயத்தில் ரணில் முந்திக் கொண்டு விட்டார் என்று தெரிகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் இந்தியா தனக்கு எதிராகச் சிந்திக்கக் கூடாது என்று திட்டமிட்டு அவர் உழைக்கிறார். அதனால் தான் மூன்று தீவுகளிலும் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டங்கள் தொடர்பான உடன்படிக்கை இம்மாதம் முதலாம் திகதி கைச்சாத்தாகியது. அதை விட முக்கியமாக ராமர் பாலத்தை மீண்டும் கட்டப் போவ தான ஒரு தோற்றத்தை அவர் வெற்றிகரமாகக் கட்டியெழுப்பி வருகிறார். அவர் நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு ஜனாதிபதி. அவர் பாலம் கட்டத் (22ம் பக்கம் பார்க்க)

**condo For Lease**

*Beautiful condo with stunning views from the PH floor. 2 Spacious bedrooms, plus den, and two full bathrooms in the unit as one is ensuite in the master bedroom. Ample closet and wardrobe space for both bedrooms and ensuite laundry with storage area. Upgraded modern kitchen.*

*Close to Kennedy Station, TTC access 24hrs, Eglinton East LRT, Go Station, schools, grocery stores, restaurants and much more.*

*Enjoy building amenities such as exercise room/gym, party room and swimming pool EXTRAS : Fridge, stove, washer & dryer. Comes with one parking space.*

*Call*

*Sri 437 971 0911*

# உச்சி வெய்யிலிலே வெண்ணெய் விற்க மோடி தமிழகம் வருகின்றாரா?

இந்தியாவிலே சனநாயகத் திருவிழா களை கட்ட ஆரம்பிக்கின்றது. மார்ச் 16ல் பொதுத்தேர்தல் அறிவிக்கப் பட்டது. ஏப்ரல் 19ம் திகதி முதல் ஜீன் 1ம் திகதி வரை, ஏழு கட்டங்களாக, வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. அதன் பின்னர், ஒரேகட்டமாக, ஜீன் 4ல் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகின் றது.

தேர்தல் தொடர்பிலான பூர்வாங்க அறிவிப்பு வெளியாகும் வரையில் கட்சி கள் காத்திருப்பதில்லை. ஆறு மாதங் களுக்கு முன்னரேயே தேர்தல் சலசலப்பு ஆரம்பமாகி விடுகின்றது. கூட்டணி ஊடாட்டங்கள் கண்சாடை காட்டத் தொடங்குகின்றன.

இந்தியப் பாராளுமன்றம் இரண்டு அடுக்குகளைக் கொண்டதாகும். அவை மக்களவை, மாநிலங்களவை என அழைக்கப்படுகின்றன. அதிலே, மக்களவைக்கான உறுப்பினர்களையே பொதுமக்கள் வாக்களித்து தெரிவு செய்கின்றனர். அதனாலே, மக்களவைத் தேர்தலையே பாராளுமன்றத் தேர்தல் என்று சுட்டுவது வழமையாகும்.

இந்தியாவிலே 28 மாநிலங்களும், எட்டு யூனியன் பிரதேசங்களும் உள்ளன. சனத் தொகையின் அடிப்படையிலேயே தொகுதிகள் அமைகின்றன. மக்கள வையிலே மொத்தமுள்ள 543 உறுப் பினர்களிலே, சுமார் அரைவாசிப் பங்கினர் உத்தரப்பிரதேசம், மகாராஷ் டிரம், மேற்குவங்கம், பீகார் மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களிலிருந்து தெரிவாகின்றனர். அந்த வகையிலே தமிழ்நாடு கவனத்தைப் பெறுகின்றது. அத்தோடு, தேசியக் கட்சிகள் தலை யெடுக்கத் திணறுகின்ற சூழலும் கவனத்தைச் சுண்டுவதாகும்.

கடந்த அரை நூற்றாண்டாகத் திரா விடக் கட்சிகளே தமிழகஅரசியலில் கோலோச்சுகின்றன. தமிழ்நாட்டில் 39 தொகுதிகளும், புதுச்சேரியின் ஒற்றைத் தொகுதியையும் சேர்த்து 40 மக்க ளவை தேர்தல் தொகுதிகள் என்பதா கவே தமிழ்நாட்டின் எண்ணிக்கை கவனிக்கப்படுகின்றது. ஏப்ரல் 19ம் திகதி ஒரே கட்டமாக தமிழகத்திலும் புதுச்சேரியிலும் வாக்குப்பதிவு நடை பெறுகின்றது. தமிழ்நாட்டிலே இரண்டு அணிகளை மையப்படுத்தியதாகவே அரசியல்களம் காணப்படுகின்றது.


ஒன்று திராவிட முன்னேற்றக் கழகம். மற்றையது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். திராவிட முன்னே ற்றக் கழகம் தேர்தல் பணிகளை திட்ட



மிட்டே செயற்படுத்துகின்றது. 2024 மக்களவைத் தேர்தல் கூட்டணியை, தேர்தல் அறிவிப்பு வெளியாக முன்னரே அறிவித்து விட்டது. தொகுதிப் பங்கீட்டையும் வேகமாக முடித்தி ருந்தது. மொத்தமுள்ள 40 தொகுதி களில் 21 திராவிட முன்னேற்றக் கழகத் திற்கும், 10 காங்கிரஸ் கட்சிக்கும், தலா 2 கம்யுனிஸ்ட், மார்கசிய கம்யுனிஸ்ட், மற்றும் தொல் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும், தலா ஒன்று வைகோவின் மறுமலர்ச்சி திமுக, முஸ்லிம் லீக் மற்றும் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சிக்கும் ஒதுக்கப்பட்டன. அடுத்த கட்டமாக, எந்தெந்த தொகுதிகளில், எந்தக்கட்சி போட்டியிடுவது என்பதை முடிவெடு த்தது. அந்தவகையிலே, தேர்தலை எதிர்கொள்ளக்கூடிய தயார்ப்படுத்தலை படிப்படியாக செயற்படுத்துகின்றது.

மறுவளத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடுக்கடலில் தத்த ளிக்கும் கப்பல் ஆகியிருக்கின்றது. ஜெயலாலிதாவின் மறைவுக்கு பின் கட்சியினுடைய திரட்சி வீரியமிழக் கின்றது. தற்போது, எடப்பாடி பழனிச்சாமியின் செல்வாக்கு கட்சியிலே ஓங்கியுள்ளது. இருந்த போதிலும், ஒ.பன்னீர்செல்வத்தை ஓரங்கட்டியதன் பாதிப்பு மறைகரமாகத் தெரிகின்றது. கூடவே ஜெயலதாவின் வளர்ப்புமக னான டிடிவி தினகரனின் தனிக்கட்சி யான அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தனி ஆவர்த்தனமும் இடை ஞ்சலாக உள்ளது. காரணம்: தென்மாவட்டங்களில் சுமார் ஐந்து விழுக்காடு வரையான வாக்கு வங்கி டிடிவி தினகரனிடம் உள்ளதெனக் கணிக்கப்படுகின்றது. ஜெயலலிதா வுக்குப் பிந்தைய காலத்தலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடனான கூட்டணியிலேயே பாரதிய ஜனதாவும் தேர்தல்களைச் சந்தித்திருக்கின்றது. தற்போது அந்த நிலை இல்லை. பாரதிய ஜனதா கூட்ட ணியிலிருந்து விலகுவதாக, 2023 செப்டெம்பரில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்தது. ஆனாலும் கூட 2024 மக்களவைத் தேர்தலிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்துக் கொள்ளவே பாரதிய ஜனதா விரும்பியது. காரணம்: சில தொகுதிகளிலேனும் வெற்றி பெறுவ தற்கு, பலமான கூட்டணி அவசியம் என்பதை பாரதிய ஜனதா நம்புகின்றது. ஆனால் அத்தகையதொரு கூட்டணி அமையவேயில்லை. அதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக த்தின் உட்கட்சிப் பிளவுகளும் கூட முட்டுக்கட்டையாகியிருக்கலாம்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்தே பாரதிய ஜனதாவும், பட்டாளி மக்கள் கட்சியும் 2019 மக்களவைத் தேர்தலை எதிர்கொண்டன. அதே போன்றதொரு கூட்டணி 2024 மக்களவைத் தேர்த லிலே ஏற்பட்டிருந்தால், வடமாவட்டங் கள், கோவை மற்றும் தென்தமிழக த்தில் வெற்றி வாய்ப்புக்களை அதிக ரித்திருக்கலாம். எதுஎப்படியோ, எடப் பாடி பழனிச்சாமியின் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் கூட்டணிக் கூடாரத்திலே நுழைய முடியவில்லை. அதனால், பட்டாளி மக்கள் கட்சியை இழுத்துக் கொண்டு போய் பாரதிய ஜனதா மற்றுமொரு கூட்டணியை அமைத்திருக்கின்றது. கூடவே, அண்ணா திராவிட முன்னேற் றக் கழகத்திலிருந்து புறமொதுங்கிய ஒ.பன்னீர்செல்வமும், டிடிவி தினகரனும் பாரதிய ஜனதாவின் கூடாரத்திலே ஒதுங்கியுள்ளனர். அந்த வகையிலே, ,ரண்டு கழகங்களுக்கு வெளியே பாரதிய ஜனதா தனியானதொரு கூட்ட ணியை உருவாக்கியுள்ளது. அதன் மூலமாக, கழகங்களின் தோளிலேயே தேசியக்கட்சிகள் சவாரி செய்கின்றன என்னும் (5ம் பக்கம் பார்க்க)



# அநுரகுமார கனடாவில் ஆற்றிய உரை தேர்தல் அரசியலுக்கான உத்தியா?

இலங்கை அரசியலில் ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களது அரசியலை மற்றும் பொருளாதார இருப்பை பற்றிய உரையாடலை மீளவும் முதன்மைப்படுத்த ஆரம்பித்துள்ளது. தென்னிலங்கையின் அனைத்து ஜனாதிபதி வேட்பாளரும் தமிழ் மக்களுடனான உறவை பலப்படுத்தும் உத்தியுடன் மேடைப் பேச்சுகளையும் வெளிப்படுத்தல் நடவடிக்கைகளையும் அதிகப் படுத்துகின்றனர்.

பாராளுமன்றத்தில் சஜித் பிரேமதாசவும் வடக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கனடாவில் அநுரகுமார திசாநாயக்கவும் வெளிப்படுத்திய அரசியல், தமிழ் மக்களது வாக்குகளை இலக்கு வைத்ததாகவே தெரிகிறது. அதில் பாராளுமன்ற செய்முறை இரண்டு மணித்தியாலத்தில் வெடுக்குநாறி கைதுக்கு விடுதலையை சாத்தியப்படுத்தியிருந்தது.

இதில் எத்தரப்பு தமிழ் மக்களது வாக்குகளை ஈர்ப்பது என்ற போட்டியை கண்டுகொள்ள முடிந்தது. யாவும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டதென்பது மட்டுமல்ல கடந்த காலத்திலும் தேர்தலுக்கு முன், தேர்தலுக்குப் பின் தமிழ் மக்களது அரசியல் என இரு வடிவத்தைக் கொண்டிருந்தது. சுதந்திர இலங்கையில் அனேகமான சிங்களத் தலைவர்களது இரட்டை முகத்தை தமிழ் மக்கள் கண்டு கொண்டுள்ளனர். ஆனால் அத்தகைய இரட்டை முகத் தோற்ற அரசியலில் தமிழ் மக்கள் ஏமாற்றத்தையே அனுபவித்தனர்.

தற்போது அநுரகுமார கனடாவில் கடந்த 23.03.2024இல் ஆற்றிய உரையை விளங்கிக் கொள்ளுதல் அவசியமானது. அநுரவின் உரை ஒரு நீண்டது. அதிகம் தமிழ் – சிங்கள் உறவு சார்ந்தது. கனடாவில் ரொறன்ரோ நகரில் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் உரையாடியுள்ளார். அதன் சாரத்தை மட்டும் பார்ப்பது பொருத்தமானது.

இலங்கையின் அரசியலில் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஐக்கியம் பற்றி உரையாடல் அமைந்திருந்தது. இலங்கையர் ஒற்றுமையாக இருந்ததாகவும் அரசியல் தலைவர்களே அத்தகைய ஒற்றுமையை குலைக்கும் இனவாத உணர்வுகளை உருவாக்கினார்கள் எனவும் அநுர குறிப்பிடுகின்றார், அத்தகைய இனவாத உணர்வுக்குப் பின்னால் அத்தகைய அரபியல் தலைவர்களது தேர்தல் தோல்வியே பிரதான காரணம் என்பதையும் அநுர முதன்மைப்படுத்துகின்றார்.

பௌத்த மதப் பண்பாட்டையும் அதன் உணர்வுகளையும் அத்தகைய தோல்வி கண்ட அரசியல் தலைவர்கள் வலுப்படுத்தி உணர்ச்சிகளை ஏற்படுத்துகிறார்கள். தேரவாதத்தை அழிக்கப் போகிறார்கள் என்ற அச்சத்தை பௌத்த பண்பாட்டை பின்பற்றுபவர்களிடம் ஏற்படுத்துவார்கள் என்று அனைத்து மதப் பண்பாட்டின் ஊடாக உரையாடுகிறார்.

இதனால் பொருளாதாரம், கல்வி, சட்டம் ஒழுங்கு, ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி பற்றி எந்த சிந்தனையும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றார். தோல்வி கண்ட அரரியல் தலைவர்களது பிரதான சுலோகம் சிங்கள இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதாகவே உள்ளது.

அவ்வாறே புலிகள் புத்துயிர் பெற விரும்புகிறார்கள் என்பதாகும். அடுத்து 2050 இல் முஸ்லிம் மக்கள் இலங்கைத் தீவில் பெரும் பான்மையை அடைந்து விடுவார்கள் என்பதாகும். இத்தகைய சுலோகங்கள் பௌத்த மதப் பண்பாட்டில் உள்ள உணர்வுகளைத் தூண்டுவதாக அமைந்து விடுகிறது. அவ்வாறே முஸ்லிம்களும் தமிழர்களும் தமது இனத்தையும் மதத்தையும் பாதுகாப்பதற்கு தமது பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். இலங்கையில் எந்த மக்களும் அரசாங்கம் தமக்கு என்ன செய்தது என்பதற்காக வாக்களிக்கவில்லை.

மாறாக தமது இன, மதத்தை பாதுகாப்பதற்காகவே தேர்தலில் வாக்களிக்கிறார்கள். இலங்கையில் இனவாத அரசியல் ஒன்று உள்ளது. அதனை துடைத்தெறிந்து விட்டு ஐக்கிய அரசியலை கட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணமே தேசிய மக்கள் சக்தியின் அடிப்படையாகும் எனக் குறிப்பிடுகிறார்.



இலங்கைத் தீவில் சட்ட ஒழுங்கு கலாசாரம், மொழி உரிமை என்பன பாதுகாக்கப்படவில்லை என்ற ஒப்புதலைத் தருவதாக அவரது பேச்சு அமைந்துள்ளது. அது மட்டுமல்ல காலாசார அடையாளங்கள் வேறு பாட்டைக் காட்ட வேண்டுமா என்ற கேள்வியையும் எழுப்புகின்றார். இன்னொருவரது மனதை புண்படுத்துவதல்ல கலாசாரம் என்கிறார். அவ்வாறானதே மதமும் அதன் மீதான நம்பிக்கையும். மத நம்பிக்கை அனைவருக்கும் சமமானது. எனது மதம் மேலானது என்ற எண்ணமே முரண்பாட்டுக்கு அடிப்படையானதாக உள்ளது என்கிறார் அநுர. ஒவ்வொரு இனத்தின் அரசியல் உரிமையும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மாகாண சபை முழுமையான தீர்வாக இல்லாது விட்டாலும் அதனை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக் கொள்கிறது எனக் கூறுகிறார் அநுரகுமார.

வடக்கிலும் தெற்கிலும் போர் பாரிய சிதைவுகளை ஏற்படுத்தியுள்ளது. தென்னிலங்கையில் ஒரு படம் போட்டு காட்சிப்படுத்தல் நிகழ்கிறது. வடக்கில் தாய்மார்கள் குழந்தைகளைப் பெறுவது போருக்கு என்று. அது பொய்யானது. அவர்களும் தென்னிலங்கை தாய்மார்களைப் போன்று நல்ல கல்லி, சிறந்த வாழ்க்கை முறையை உருவாக்கி அந்தப் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும் என்பதே அவர்களதும் நோக்கமாகும் என விவாதிக்கின்றார், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர். மிக வேகமாக அபிவிருத்தித் திட்டங்களை பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் ஏற்படுத்த வேண்டும் என நீண்ட உரையொன்றையும் அதன் போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலையும் தந்துள்ளார்.

அநுரகுமாரனின் உரையில் ஒரு புதிய யுகத்தை ஏற்படுத்துவது போல் வெளித் தோற்றத்தில் தெரிகிறது. ஆனால் அதன் அடிப்படைகள் அனைத்தும் அல்லது தேசிய மக்கள் சக்தியினது எண்ணங்கள் அனைத்தும் ஒரே ஜனாதிபதித் தேர்தலில் சாத்தியமாகக் கூடியதா என்ற கேள்வி தவிர்க்க முடியாதது. இவ்வாறு பல தென்னிலங்கைத் தலைவர்களது உரைகளைப் பார்த்தவர்கள் தமிழர்கள். இந்த உரையே அநுரவின் அண்மிய வெற்றிவாய்ப்பின் சூழலைத் தகர்த்து விடும். இது சிறப்பான உரை. ஆனால் நடைமுறைச் சாத்தியமாவது பற்றி அதிக கேள்விகள் உண்டு. யதார்த்தத்தை வைத்துக் கொண்டே பிரச்சினைக்கு தீர்வு களை எட்ட வேண்டும்.

இதனை விரிவாகப் பார்ப்பது தேவையாக உள்ளது. முதலாவது, இடதுசாரிகளும் இலங்கைத்தீவின் அரசியலும் பற்றியது. அநுரவும் இடதுசாரி பாரம்பரியத்திற்குள் வந்ததாக தென்னிலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் கருதப்படுகின்றார். ஆனால் சண்முகதாசனைத் தாண்டி இலங்கைத்தீவில் எவரும் இடதுசாரியாக இல்லை என்ற விமர்சனம் உண்டு. இடதுசாரிகள் அனைவரும் அரைகுறை இடதுசாரிகளாகவே சிங்கள அரசியலில் காணப்பட்டனர். இது அநுரவுக்கும் பொருந்தும்.

ஏனெனில் அவரை அடையாளப்படுத்துவது ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) என்பதை யாரும் நிராகரிக்க முடியாது. இடதுசாரித்துவத்தின் அடிப்படை பிற தேசியங்களை அங்கீகரிப்பது. பிரச்சினைகளை யாரும் கூறி விட்டுச் செல்லலாம். ஆனால் அதற்கு தீர்வு காண்பதும் அத்தீர்வின் அடிப்படை எதுவென்பதும் முதலில் கண்டு கொள்ளப் பட வேண்டும். ஈழத்தமிழர் பிரச்சினையானது, அவர்கள் ஒரு



தேரியமாக இருத்தலிலிருந்து தொடங்குகிறது. இதனை பொருளாதார அபிவிருத்தியினால் தீர்க்கமுடியாது.

அரசியல் அதிகாரமற்ற அபிவிருத்தியைத் தான் வலதுசாரித் தலைவர்கள் இதுவரை தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக முன் வைத்தார்கள். அவற்றால் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை. 19ஆம் நூற்றாண்டிலேயே உலகம் அரசியல், பொருளாதரம் பற்றிய உரையாடலைத் தொடக்கி விட்டது. மார்க்சிஸத்தின் பிந்திய விருத்தியில் மேல்கட்டுமானம், கீழ் கட்டுமானம் எனும் உற்பத்திக்கும் கலாசாரத்திற்குமான வலிமையானதான உறவு உண்டு.

அதாவது .அதனை அரசியலாகவும் பொருளாதாரமாகவும் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இலங்கைத்தீவின் இடதுசாரிகள் தமிழர்களை ஒரு தேரிய இனமாகக் கொள்வதிலேயே கதிகஇணக்கப்பாடு இல்லாதவர்களாக உள்ளனர். 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் கட்டத்தை விமர்சனம் செய்த இடதுசாரிகள் 1972இல் தலைகீழான முடிவுகளை எடுத்ததுடன் தமிழருக்கு உரிமை வழங்கும் வாய்ப்பினை நிராகரித்தார்கள். இலங்கையின் இடதுசாரிகள் என அடையாளப்படுத்தப்பட்ட என்.எம். பெரேரா இனப் பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வுகாணத் தவறினால் தமிழர் பிரிந்து சென்று இந்தியாவுடன்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



இணைந்து விடக் கூடிய வழிமுறைகள் இருப்பது குறித்து எச்சரித்தாராம். அவ்வாறே இலங்கையின் அப்போதைய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் Ceylon will be another Korea என்று கூறியது நினைவு கொள்ளத் தக்கது. அவ்வாறே இடதுசாரிகள் தமிழர்களை அவமதிக்கும் விதத்தில் 'மசாலா வடைய் அப்பிட்ட எப்ப' என முழக்கமிட்டார்கள். அதேவேளை 1944 ஆம் ஆண்டு இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சி 'தமிழர்கள் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய தேசிய சுயநிர்ணய உரிமையை உடையவர்கள்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இதுவே அவர்களது அரசியல் பரிபாஷையாக உள்ளது.

இலங்கை அரசியலில் ஆழமாக உரையாடப்பட வேண்டிய முக்கிய விடயம் சிங்கள பெரும்பான்மை மக்கள் பற்றியது. அவர்களது மனோநிலை பற்றியது. அவர்கள் அளிக்கும் வாக்குகளை மையப்படுத்தியே சிங்களத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அநுர சிங்களத் தலைவர்களையே அதிகம் குறை கூறுகின்றார். தலைவர்களது தோல்வியே இன உணர்வைத் தூண்டுவதற்குக் காரணம் என்கிறார். ஆனால் 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்க தனிச் சிங்களச் சட்டம் தொடர்பில் இடதுசாரித் தலைவர்கள் பாராளுமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் அதனை எதிர்த்து தீவிரமாக பிரசாரம் செய்தனர். ஆனால் தேர்தலில் பண்டாரநாயக்க பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்து தனிச் சிங்களச் சட்டத்தை சட்டமாக்கினார். மக்களிடம் தேர்தல் காலத்தில் போதிய அறிவுட்டலை சிங்கள இடதுசாரித் தலைவர்கள் முன் வைத்ததுடன், அத்தகைய தலைவர்களது கட்சியை ஆட்சியில் அமர்த்தும் திறனும் தகைமையும் மக்களிடம் இருந்தது. ஆனால் சிங்கள மக்கள் அத்தகைய தெரிவை மேற்கொள்ளாதமை தலைவர்களை விட மக்களிடம் இருந்த மனோநிலை அடிப்படையானது. அதனையே சிங்கள மக்கள் போரின் போதும் அதற்குப் பின்னரும் தமிழ் மக்கள் மீது கொண்டுள்ளனர்.(22ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

**மேஷம்**
மேடராசி அன்பர்களே! பகை விலகி எதிலும் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் எதையும் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எண்ணப்படி எல்லாம் நடக்கும்.குடும்பத்தில் இருந்த மன வருத்தங்கள் மாறி சுமூகமான நிலை உண்டாகும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும்.

**ரிஷபம்**
ரிஷபராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். மற்றவர்களிடம் உங்கள் கருத்துக்களை கூறும் போது அவர்கள் தவறாக அதை புரிந்து கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி அகலும். கூட்டு தொழில் வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நன்மை தரும். உத்தியோகத்தில் வீண் அலைச்சலை சந்திக்க நேரும். மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு அதன் படி நடப்பது நல்லது.

**மிதுனம்**
மிதுனராசி அன்பர்களே! எந்த ஒரு வேலையை செய்து முடிப்பதிலும் இருந்த தடை தாமதம் நீங்கும். வீண் விவகாரங்களில் தலையிடுவதையும் மற்றவர்களுக்காக வாதாடுவதையும் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் புதிய ஆர்டர்கள் பெறுவதில் இருந்த தாமதம் நீங்கும். வரவு இருந்த போதிலும் வியாபாரம் தொடர்பாக திடீர் முதலீடு செலவு உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லது.

**கடகம்**
கடகராசி அன்பர்களே! முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்னைகள் அகலும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம். உழைப்பு அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களின் வீண் பேச்சால் மனவருத்தம் உண்டாகலாம்.

**சிம்மம்**
சிம்மராசி அன்பர்களே! திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வது நல்லது. அனைத்து தடைகளும் அகலும். தொழில், வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகலாம். பணியாளர்கள் செயல்கள் உங்களுக்கு கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிக நேரம் வேலை பார்க்க வேண்டும்.

**கன்னி**
கன்னிராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். சுதந்திர எண்ணம் உண்டாகும். சின்ன சின்ன விஷயங்களில் கூட மனநிறைவு ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் வியாபாரம் தொடர்பாக பயணம் செல்ல நேரிடலாம். போட்டிகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். மேலிடத்திடம் நல்ல அணுகுமுறை நீட்டிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்

**துலாம்**
துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியம் தாமதப்படுகிறதே என்ற கவலை நீங்கும். இரவில் நீண்ட நேரம் கண் விழிக்க வேண்டி வரலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் எப்போதும் பிசியாக காணப்படுவர். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றத்தை ஏற்படுத்தும். கடன் விவகாரங்களிலும், கொடுக்கல் வாங்கலிலும் எச்சரிக்கை தேவை. பொறுப்புகள் கூடும். குடும்பத்தினரால் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். வாழ்க்கை துணையின் உடல் நிலையில் நீடித்து வந்த ஆரோக்கிய குறைபாடு பூர்த்தியாகும்.

**விருச்சிகம்**
விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் தீரும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி காண்பீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை ஆகியவற்றை வாங்குவதற்கு இருந்து வந்த தடைகள் நீங்கும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் தராவிட்டாலும் வருமானத்திற்கு குறைவு இருக்காது. உத்தியோகத்தில் பணியில் கவனம் செலுத்துவது நல்லது



**தனுசு**
தனுசுராசி அன்பர்களே! எந்த விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீண் குற்றச்சாட்டிற்கு ஆளாகலாம். உத்யோகஸ்தர்கள் பயணங்கள் செல்லும் போதும், வாகனங்களில் செல்லும் போதும் கவனம் தேவை. வேலை செய்யும் இடத்தில் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் நிதானமாக செல்வது நன்மை தரும். குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் பிரச்னைகள் தோன்றலாம்

**மகரம்**
மகரராசி அன்பர்களே! எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகளில் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஊழியர்களால் நன்மை உண்டாகும். துணிச்சலாக முயற்சிகள் மேற் கொண்டு வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும்.

**கும்பம்**
கும்பராசி அன்பர்களே! சின்ன விஷயங்களால் மன நிறைவு உண்டாகும். மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. எந்த செயலையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் கவனமுடன் பழகுவது நல்லது.

**மீனம்**
மீனராசி அன்பர்களே! கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் காரியங்கள் சாதகமாக நடைபெறும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலையில் டென்ஷனும், வீண் அலைச்சலும் இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதம் ஏற்படலாம். கடன் விஷயங்களை தள்ளிப்போடுவது நல்லது. புதிய நபர்களுடன் கவனம் தேவை. எதைப் பேசுவதாக இருந்தாலும் பேச்சில் நிதானம் தேவை.


வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.


# உலகின் மிக வயதான மனிதர் மரணம்



2022 ஆம் ஆண்டில் உலகின் மிக வயதான மனிதர் என்று கின்னஸ் உலக சாதனையால் சான்றளிக்கப்பட்ட வெனிசுலா ஜுவான் விசென்டே பெரெஸ் மோரா தனது 114 வயதில் செவ்வாய் கிழமை காலமானதாக அதிகாரிகள் மற்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

ஜுவான் விசென்டே பெரெஸ் மோரா 114 வயதில் நித்தியத்தை கடந்து விட்டார்'' என்று வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ சமூக ஊடக தளமான ஓ இல் தெரிவித்துள்ளார்.

பெரெஸ் பெப்ரவரி 4, 2022 அன்று உயிருடன் இருக்கும் மிக வயதான மனிதராக அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டார்.

2022 நிலவரப்படி 11 குழந்தைகளின் தந்தையான அவருக்கு 41 பேரக் குழந்தைகள், 18 கொள்ளுப் பேரக் குழந்தைகள் மற்றும் 12 கொள்ளுப் பேரக்குழந்தைகள் உள்ளனர். விவசாயியான இவர் மே 27, 1909 இல் தச்சிரா வில் உள்ள எல் கோப்ரே நகரில் பிறந்தார். தனது ஐந்தாவது வயதில், அவர் தனது அப்பா மற்றும் சகோதரர்களுடன் விவசாயத்தில் பணியாற்றத் தொடங்கினார் என்று 2022 இன் கின்னஸ் அறிக்கை கூறுகிறது.


எதிர்பாருங்கள்! காத்திருங்கள்! வாருங்கள்!
முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 13வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600


# அநுரகுமார கனடாவில் ஆற்றிய உரை

(21ம் பக்கத் தொடர்ச்சி) 1983 ஆம் ஆண்டு தமிழருக்கு எதிராக ஏற்பட்ட இனக் கலவரத்திற்கு எத்தகைய நீதிப் பொறிமுறை அமைந்துள்ளது என்பது தெரிந்த விடயம். அதன் மூலம் தென்னிலங்கை நிர்வாகிகளும் சதிகாரிகளும் தமிழருக்கு ஆதரவாக செயல்படும் தன்மை இல்லாமை என்பதை கண்டு கொள்ள முடிகிறது. இதனை சமகாலத்தில் தொல்லியல் திணைக்களம், காணி ஆணைக் குழுக்கள் என்பனவற்றின் இயல்புகளைக் கொண்டு விளங்கிக் கொள்ள முடிகிறது. எனவே அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், நிர்வாகிகள், மக்கள் என எல்லாத் தரப்பும் ஒன்றிணைந்தே தமிழருக்கு, எதிரான அனைத்து அடக்குமுறைகளையும் மேற்கொள்கின்றனர் என்பதை தவிர்க்க முடியாது புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே அநுரகுமார குறிப்பிடுவது சிறப்பான விடயமாக அமைந்தாலும் அதன் நடைமுறை சாத்தியமற்றதை கடந்த கால அனுபவங்களைக் கொண்டு உணர முடிகிறது. அநுர கிட்டிரென மூளைச் சலவை செய்யப்பட்டவர் போல் உரையாடுவதாக விமர்சனம் உண்டு. இது தேர்தல் உத்தியாகவே கருதப்படுகிறது. அது மட்டுமன்றி தென்னிலங்கைத் தலைவர்களும் மக்களும் அநுரகுமார போன்று குறைந்த பட்சமான இடதுசாரி மனோ நிலை கூட இல்லாதவர்கள். அவர்களது மனோநிலை ஏனைய தேசியங்களுக்கு எதிரானதாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

சுதந்திரத்திற்கு முன்பிருந்தே அத்தகைய மனோநிலை வளர்க்கப்பட்டுள்ளது. அதனை மாற்றத்திற்கு உள்ளாக்குவதென்பது இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். தொல்லியல் ஆய்வாளர் கலாநிதி ஈ.டபிள்யூ அதிகாரம் குறிப்பிடும் போது 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜீலை இனப் படுகொலையைக் கண்டு 'இத்தகைய பெரும் துயரம் இனிமேல் மீண்டும் மீண்டும் நடைபெறாது இருக்க வேண்டுமாயின் ஒரு பிரதியைக் கூட மிஞ்சி விடாமல் அனைத்து மகாவம்ச பிரதிகளையும் தீயிட்டுக் கொளுத்த வேண்டும்' என்பதை நினைவு கொள்வது பொருத்தமானதாக அமையும்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலும்

(19ம் பக்கத் தொடர்ச்சி) தயார் என்று பகிடிக்குக் கூற முடியாது. ஆனால் இந்தியப் பொருளாதாரம் மோடியின் ஆட்சியின் கீழ் அடைந்து வரும் அபரிதமான வளர்ச்சி, குறிப்பாக தமிழகம் அடைந்து வரும் அபரிதமான வளர்ச்சி, என்பவற்றின் பின்னனியில் வைத்துப் பார்க்கும் பொழுது, அந்தப் பாலம் ஊடாக சிறிய இலங்கை தீவு இந்தியாவால் விழுங்கப்பட்டு விடும் என்ற அச்சத்தை சிங்கள மக்கள் மத்தியில் விதைப்பது இலகுவானது. அதை ரணில் எப்படி எதிர்கொள்வார்?

அவரைப் பொறுத்தவரை ஜனாதிபதி தேர்தல் வரையிலும் இந்தியாவைச் சமாளித்தால் போதும். ஜனாதிபதித் தேர்தலில் இந்தியா அவருக்கு எதிராகச் செயல்படாவிட்டால் சரி என்று அவர் சிந்திப்பதாகத் தெரிகிறது. ஆக மொத்தம், ரணில் ஜனாதிபதித் தேர்தலை நோக்கித் தன்னைப் பலப்படுத்தி வருகிறார் என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகின்றது. ஆனால் மூன்றாகப் பிரியப் போகும் சிங்கள வாக்குகள் யாரைத் தெரிவு செய்யும்?

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
HomeLife Higher Standards
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com

# அரங்கு நிறைந்த மக்களுடன் Mrதமிழ் அமைப்பு நடத்திய "தெய்வீக ராகமாலை" "மாதரே சிறகை விரி" 2 நாள் நிகழ்வுகள்





கடந்த வாரம் 29, 30ம் திகதிகளில் ஸ்காபரோவில் மிஸ்டர் தமிழ் அமைப்பு நடத்திய தெய்வீகராக மாலை மற்றும் மாதரே சிறகை விரி ஆகிய இரண்டு நாள் நிகழ்வுகள் அரங்கு நிறைந்த மக்களுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு தமிழகத்தில் இருந்து முன்னணி இசைக் குழுவான மணி இசைக் குழு இசை வழங்கியது.முன்னணிப் பாடகிகளாகத் திகழும் சீர்காழி அருணா சகோதரிகளுடன் தென்னிந்தியப் பின்னணிப் பாடகர் முகேஷ்ஆகியோர்கலந்து கொண்டனர்.





வானிலை கணிக்கக்கூடியது ஆனால்
உங்கள் எதிர்காலம் அப்படியல்ல
எங்கள் நோக்கம் உங்கள்
எதிர்காலத்தை பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE | CRITICAL ILLNESS | DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE | SUPER VISAS | RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800 ajithinsurance.ca ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4